
# சட்டத்தின் திறவுகோல்



Appropriate Technology Services
12 .. POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் மனநிறைவே எங்களின் சேவை
உங்களின் சேவைக்கு என்றும்!

OO போட்டோஸ்ரட்
(நிழற்பட பிரதி)

OO றோணியோ
(கல்லச்சு)

சுடர்

இல. 22, சோதியா தெரு
(மின்சாரநிலைய வீதி)
யாழ்ப்பாணம்.

O ஆங்கிலதட்டச்சு

O தமிழ் தட்டச்சு

OO ஸ்ரென்சில்
வேலைகள்

OO பாடசாலை
உபகரணங்கள்

அனைத்திற்கும் இன்றே நாடுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்
# திறவுகோல்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3618

சட்டத்தின் திறவுகோலை
அணி செய்யும்
ஆக்கங்கள்


| | |
|---|---|
| தமிழீழத் தேசியத்தலைவரின் உரையிலிருந்து | 02 |
| எமது பார்வையில் | 04 |
| குடியியல் விடயத்தின் முதன்மைகள் | 05 |
| என்பக்கம் வருவீர்களா? | 08 |
| நிர்வாகத்தில் தீர்மானம் எடுத்தல் (முகாமைத்துவம்) | 09 |
| யதார்த்தம் (உண்மைநிகழ்வு) | 14 |
| யூரரில்லா நீதிமன்ற விளக்கம் | 18 |
| சட்ட நூல்களின் அறிமுகம் | 20 |
| கேள்வி? பதில் | 22 |
| தெரிந்துகொள்ளுங்கள்-அதிகாரி ஜொனிமே கிப்சன் | 24 |
| புதியபாதையில் நகரும் உலகநீதி முறைகள் | 26 |
| வேட்டைக் கத்தி | 29 |
| கொள்ளி வாடகைக்கு | 33 |



ஆக்கம்:- ஆசிரியர் குழு

இதழமைப்பு:- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

அட்டைப்படம்:- தயா

அச்சு/அட்டை ஆக்கம்:- அந்திவானம் பதிப்பகம், நாவலர் சாலை
யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு -
சட்டத்தின் திறவுகோல் நடுவப்பணியகம் நீதிநிர்வாகத்துறை
பொற்பதி வீதி, கோண்டாவில்

விலை ரூபா 20/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகள் ஆகிய நீங்கள் நீதி நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் போது மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்



*இன்றைய நாள் எமது போராட்ட வரலாற்றின் முக்கிய நாளாகும்.*
*இன்றைய நாள் நீதி நிர்வாகத்துறைக்கு அத்திவாரம் இடப்பட்ட, முக்கிய நிகழ்வாக சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெற்று இருக்கின்றது.*

*தனிப்பட்ட உறவுகளுக்கும், பந்த பாசங்களுக்கும் இடம் அளிக்காது, நேர்மையுடன் பிணக்குகளை அணுகி நீதி வழங்க வேண்டும்.*

*இலட்சியப் போராளிகளாகிய உங்களிடமிருந்து நியாயமான நீதி கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள் எனவே மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையில் கண்ணியத்துடன் செயற்பட்டு நீதி வழங்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக முன்னர் நீதிச் சபைகள்,
எமது இயக்கத்தால் நிறுவப்பட்டு
மக்களின் பிணக்குகளைத்
தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
இன்று நீதித்துறையில் பயிற்சி பெற்ற
போராளிகள், நீதியாளர்களாகவும்
சட்டவாளர்களாகவும் உருவாக்கப்பட்டு
செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை
கட்டியெழுப்பப்படுகின்றது.
ஒரு சுதந்திரம் பெற்ற இறைமையுடைய
நாட்டின் அரச நிர்வாக அலகு போல
எமது நீதித்துறை உருவாக்கப்படுகின்றது.
இது எமது போராட்டத்தின்
பாரிய வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

போராளிகள் நீதியாளர்களாகவும்,
சட்டவாளர்களாகவும்
பொறுப்பை ஏற்று தமது பிரச்சனைகளை
நேர்மையான முறையில்
அணுகி, சரியான முறையில் நீதி வழங்குவார்கள்
என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

போராளிகள் ஒரு உன்னதமான
குறிக்கோளுக்காக தமது
உயிரையும் துறக்க தயாராக
உள்ள இலட்சிய வாதிகள்
என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

எனவே போராளிகள் ஆகிய நீங்கள்
நீதி நிர்வாகத்தைப்பொறுப்பேற்கும் போது
மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.
மக்களின் எதிர்பார்ப்புக்களை
நிறைவேற்றும் வகையில் நீங்கள்
நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும்
செயலாற்றுவீர்கள் என நம்புகின்றேன்.

**தமிழீழத் தேசியத் தலைவர் திரு .வே. பிரபாகரன் அவர்களினால் 19. 08. 1993 அன்று நீதியாளர்கள், சட்டவாளர்களுக்கான உறுதியுரை நிகழ்வின் போது ஆற்றிய உரையிலிருந்து ......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் திறவுகோல்

இதழ்-- 1, 1995 ஆனி

## எமது பார்வையில்

சட்டம், ஒவ்வொரு சட்டப்பூர்வமான மனிதனுக்கும் உரித்தான ஒன்று. மனித இயக்கவியல் வாழ்வுடன் இது பின்னிப் பிணைந்துள்ளது. இன்று மனித இனத்தின் சகல நகர்வுகளையும் சட்டமே ஒழுங்குபடுத்துகிறது

எனவே, சில குறிப்பிட்ட வருடங்களுக்கு முன்னர் சட்டத்தைக் கற்பவர்களும் அல்லது அதன் அடிப்படையை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களும்சிரமமாகவே அதனை அறிவதற்கான வாய்ப்பு எமது சமுதாயத்திலிருந்தது. அத்தோடு குறிப்பிட்ட சிலரால்தான் சட்டம் பற்றிய அறிவைப்பெற முடியும் என்ற கருத்தும் எமது சமுதாயத்தில் நிலவி வந்தது.

ஆனால் இன்று நிலமை மாறிவிட்டது. மிகவும் துரித கதியில் வளர்ந்து வரும் இனங்களுக்குள் தமிழினமும் ஒன்று. எனவே இன்று எமது போர் சூழலில் வாழும் எமது மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள் அவர்களைப்பற்றி இறுக்கியிருக்கின்றது. அவர்களுக்கு அப்பிரச்சனைகளுக்குள்ளால் இருந்து விடுபட்டு வரத் தெரியாத நிலையில் தவிக்கின்றார்கள். காரணம் சட்டம் என்னவென்று தெரியாது. அது தொடர்பான அறிவைப் பெற வேண்டும் என்றால் அதற்குரிய பொருளாதார வசதிகள் இல்லை. இன்னுமொருவரிடம் சென்று சட்டம் தொடர்பாக அணுகி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று நினைத்தால் பணம் இல்லை. எனவேதான் இவற்றை எல்லாம் கருத்தில் எடுத்து உங்களின் கையில் சட்டத்தின் திறவுகோலை தவழவிடுகின்றோம்.

மனித வாழ்வில் அத்தியாவசியமான பல விடயங்கள் உள்ளன. அவற்றுள் சட்டமும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. எனவே சட்டத்தை சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும் ; தங்களுடைய பிரச்சனைகளை தாங்களே சட்டத்தின் மூலம் தீர்வு காண அல்லது அதற்குரிய வழிமுறைகளை அறிந்து கொள்ள சட்டத்தின் திறவுகோல் என்ற இச் சஞ்சிகையை உங்கள் முன்னிலையில் வைப்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஒவ்வொரு வாசகர்களின் ஆதரவையும், ஆக்கபூர்வமான ஆசிகளையும் வேண்டிநிற்கின்றோம். உங்களின் ஆதரவுடன்சட்டத்தின் திறவுகோல் தொடர்ந்து வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட விளக்கம்

மனித சமுதாயம் தற்பொழுது துரிதகதியில் நாகரீகம் என்றபோர்வையில் அதிவேகமாக வளர்ந்து வருகின்றது. இவ்வேளையில் நாம் எமது குடியியல் உரிமைகளை பேணிப்பாதுகாப்பதற்கு சட்டத்தில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதன் வழியில் செயற்படுவோமாக இருந்தால் எமது குடியியல் உரிமைகளை சரியான முறையில் நாம் அனுபவித்துக் கொள்வதோடு, ஏமாற்றப்படாமலும் பாதிக்கப்படாமலும், இருக்கலாம்.

# குடியியல் விடயத்தின் முதன்மைகள்

குடியியல் சட்டம் தனிமனித உரிமைகள் தொடர்பான ஒரு பிரதானமான சட்டமாகும். இச்சட்டமானது நடைமுறை வாழ்க்கையில் தனிமனிதனோடும் சமுதாயத்தோடும் பின்னிப் பிணைந்து காணப்பட்டு வருகிறது. ஆதி காலத்தில் மனிதர்கள் குடியியல்சார் விடயங்களை இனம் காணும் அளவிற்கு அறிவு உடையவராய் இருக்கவில்லை. ஆனால்மனித இனம் பெருகியதாலும் மனித தேவைகள் அதிகரித்ததன் விளைவாகவும் மனிதனது சாதாரண வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்ததாக உருவெடுத்தது. உருண்டு வரும் உலகத்தில் மனிதன் தனது சுயநலத்தை கருத்தில் கொண்டும் தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும் மற்ற மனிதனின் குடியியல் உரிமைகளை மீறுதல் அல்லது பறித்தல் போன்ற இழி செயல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டான். இதனால் குடியியல்சார் விடயங்களும் சட்ட உலகால் வகுக்கப்பட்டது.

சாதாரணமாக மனித சமுதாயத்தில் பணக்கொடுக்கல் வாங்கல்களோ அல்லது பெறுமதி மிக்க ஆவணங்கள் பரிமாற்றமோ அல்லது பெறுமதிமிக்க சொத்துக்கள் பரிமாற்றம் தொடர்பான விடயங்கள் உரிய சட்டத்திற்கு இணங்க சரியாக ஒவ்வொருவராலும் கையாளப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்

# திறவு கோல்

சந்தர்பத்தில் தனிமனிதர்களுக்கிடையில் அவை தொடர்பான குற்றவியல் அல்லாத பிணக்குகள் உருவெடுக்கின்றன. இப்பிணக்குகள் குடியியல் பிணக்குகளைச்சாரும்.

இப்பிணக்குகள் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுமிடத்து அங்கே தகுந்த ஆவணச் சான்றுகள் அல்லது நேரடிச்சான்றுகள் இப்பிணக்கைச் சரியான முறையில் தீர்ப்பதற்கு தேவையாக உள்ளது.

ஆனால் நாம் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் விடும் சிறு சிறு தவறுகளால் நாம் நீதிமன்றம் சென்றும் எமது பொருட்களையோ ஆதனங்களையோ ஆவணங்களையோ அடைய முடியாதுள்ளது. இதற்கு காரணம் நாம் சட்டம் விதிக்கின்றபடி நடக்காமையே. நாம் எமது பணத்தையோ பெறுமதியான ஆவணத்தையோ பெறுமதியான பொருட்களையோ கொடுக்கும்போது அப்பொருட்களைப் பெறுவோரிடமிருந்து அத்தாட்சிப்படுத்தப்பட்ட நோட்டுக்களோ அல்லது கடிதங்களோ அல்லது நம்பிக்கையானவர்கள் முன்னிலையிலோ கொடுக்கல் வாங்கல்களை செய்வதில்லை. இப்படி ஒவ்வொருவரும் செய்வோமாக இருந்தால் பிரச்சனைகளை இலகுவாக கையாள்வதற்கும் நீதிமன்றத்தில் நீதிமன்ற நிரூபணத்திற்கும் எந்தவொரு சிக்கலோ இடர்பாடோ ஏற்படாதென்பது தெளிவு.

சாதாரணமாக நாம் ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்ட பணத்தை கடனாகக் கொடுக்கின்றோம். அவர் அப்பணத்தை குறிப்பிட்ட தவணையில் தருவதாக எம்மிடம் பணத்தை வாங்கிச் சென்றார். ஆனால் குறிப்பிட்ட காலம் கடந்த பின்னர் அப்பணம் எம் கைக்கு கிடைக்கவில்லை நாம் பலமுறை அலைந்தும் இரந்து கேட்டும் அவர் தருவதாக கூறி ஏமாற்றிவருகின்றார். இதனால் அதிருப்தி அடைந்த நாம் இப்பணத்தைப் பெறுவதற்காக நீதிமன்றத்திற்கு சென்று முறையிடுகின்றோம். ஆனால் நீதிமன்றம் எம்மிடம் பணம் கொடுத்ததற்கான ஆவணத்தையும் சாட்சியையும் கேட்கின்றது. எம்மால் இது தொடர்பான தெளிவில்லாமல் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பணத்திற்கு ஆவண சான்றுகளோ சாட்சிகளோ இல்லை. இந்நிலையில் நீதிமன்றம் கேட்கும் போது எம்மிடம் எமது மனச்சாட்சியை தவிர வேறு ஒரு சான்றுகளும் இல்லை என்கிறோம். இதை சாதகமாக பயன்படுத்திப் பணம் பெற்றவர் இவரிடம் எந்தப் பணமும் பெறவில்லை என மன்றில் கூறுகின்றார். உண்மையில் இங்கு பணக்கொடுப்பனவு நடைபெற்றுள்ளது. ஆனால் எம்மால் பணக் கொடுப்பனவு நடைபெற்றதென்பதை நிரூபிக்க முடியாமல் போய்விட்டது. இதனால் நீதிமன்றம் திருப்தியடையும் படியான எதையும் நாம் நிரூபிக்கவில்லை, இந்நிலையில் நீதிமன்றானது பணக்கொடுப்பனவு இடம்பெறவில்லை என்ற முடிவிற்கே வரும். அல்லது இவ்வழக்கை தொடர்ந்து நடாத்த முடியாது என்ற காரணத்தால் தள்ளுபடி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்
# திறவு கோல்

எனவே இங்ஙனம் நாம்
விடுகின்ற சிறு தவறினால்
எமது பணத்தையே
நாம் இழந்து நிற்கின்றோம்.
எனவே இதன் விளைவாக
நாம் எமக்குள் புலம்பி
நீதிமன்றத்திற்கு சென்றும் நியாயம்
கிடைக்கவில்லை என எண்ணிக்
குமுறுகின்றோம். அழுகின்றோம்
எனவே எமது குடியியல் உரிமையை
எமது தவறினாலேயே இழக்கின்றோம்.

ஒரு கொடுக்கல் வாங்கலை
நாம் எவ்வாறு சரியாக
கடைப்பிடிக்கவேண்டும் என்பதை
இங்கே ஒரு சிறு உதாரணத்தின் மூலம்
கூறுகின்றோம்.
அப்பன் என்பவர் தனக்கு 50, 000/-
தேவைப்படுவதாக தன்னுடைய
நண்பனான சந்திரன் என்பவரிடம்
கேட்கின்றார்.
இப்பணத்தை 03 மாதத்திற்குள்
திருப்பித் தருவதாக கூறுகின்றார்.
சந்திரன் தான் கொடுக்கின்ற பணத்திற்கு
அப்பனிடமிருந்து ஒரு கடிதம்
ஒன்றை பெற்றுக்கொள்கின்றார்.
அக்கடிதத்தில் தனது நண்பர்களான
வேலுப்பிள்ளையையும்
மயில்வாகனத்தையும்
இப்பணக்கொடுப்பனவு
நடைபெற்றதற்கான சாட்சியாக
கையொப்பத்தையும் அக்கடிதத்தில்
வாங்கிக்கொண்டு அவர்கள்
முன்னிலையிலேயே
50, 000/- பணத்தையும் அப்பனிடம்
கொடுக்கின்றார்.

ஆனால் குறித்த தவணையில்
அப்பன் அப்பணத்தை சந்திரனிடம்
கையளிக்கவில்லை.
இதன் பின்னர் பல தடவைகள்
சந்திரன் தனது பணத்தைத்தரும்படி
அப்பனிடம் கேட்டும்
அப்பன் பல சாட்டுப்போக்குகளைச்
சொல்லி வந்தான்.
இதனால் சந்திரன் தனது
பணத்தைப் பெறுவதற்காக
நீதிமன்றத்தில் முறையிடுகின்றார்.
இங்கே நீதிமன்றம் எதிர்பார்க்கும்
ஆவணச்சான்றுகளையும் நேரடிச்
சாட்சிகளையும் சமர்ப்பித்து தான்
அப்பனுக்கு 50, 000/- பணத்தை
கொடுத்தேன் என்பதை
நிரூபிக்கின்றார்.
எனவே மன்று சந்திரனுக்கு
சேரவேண்டிய பணத்தை
அப்பனிடமிருந்து
பெற்றுக்கொடுக்கின்றது.

இவ் உதாரணத்தின் மூலம் நாம்
ஒன்றை தெளிவாக விளங்கிக்
கொள்ளக்கூடியதாக உள்ளது. அதாவது
எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கோ
அல்லது ஆவண, பொருட்கள்
கைமாற்றங்களுக்கோ நாம்
முகத்திற்கஞ்சியோ நம்பிக்கையின்
அடிப்படையிலோ செயற்படாமல்
இவ்விடயம் தொடர்பாக சட்டம்
எதை கூறுகின்றது என்பதை கருத்தில்
எடுத்து நாம் அதன்படி நடப்போமாக
இருந்தால் எமது குடியியல் பிணக்குகளை
இலகுவில் தீர்த்து எமது குடியியல்
உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

எனவே மனித சமுதாயம் தற்பொழுது துரிதகதியில் நாகரீகம் என்றபோர்வையில் அதிவேகமாக வளர்ந்து வருகின்றது. இவ்வேளையில் நாம் எமது குடியியல் உரிமைகளை பேணிப்பாதுகாப்பதற்கு சட்டத்தில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதன் வழியில் செயற்படுவோமாக இருந்தால் எமது குடியியல் உரிமைகளை சரியான முறையில் நாம் அனுபவித்துக் கொள்வதோடு, ஏமாற்றப்படாமலும் பாதிக்கப்படாமலும், இருக்கலாம்.

— இசையரசன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் **திறவு கோல்**

Appropriate Technology ...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

# என் பக்கம் வருவீர்களா ?

ஓ ........ மனித இனமே! உன் பாட்டில்
எங்கே செல்கின்றாய்.
என்னை ஒரு கணம்
திரும்பிப்பார்
உங்களுக்காக
உங்களால் இயற்றப்பட்டவன்
நான்!

என்னை யாரென்று
புரிகிறதா
உங்களது அன்றாட
வாழ்வில் உங்களோடு
இணைந்து நிற்பவனே
நான்!!

இன்னும் ஏன்
யோசனை
நீதியையும்
நியாயத்தையும்
உங்களுக்கு
உங்கள் மடியில்
பிறந்த குழந்தையே
நான்!!!

இன்னுமா
விளங்கவில்லை
உங்களால்
எனக்கு அழகாக
சூட்டப்பட்ட
பெயர்தானே
''சட்டம்''

இப்போது
புரிகிறதா நான்
யாரென்று
இனியாவது என்பக்கம் வருவீர்களா
என் இனமே
நான் பேசிக்கொண்டே
செல்கிறேன்
ஆனால் நீயோ
பேச்சு மூச்சற்று
நிற்கின்றாய்
ஏன் தயங்குகின்றாய்?
சட்டத்தின் ஓட்டையை
பயன்படுத்தி
ஆயிரம்
குற்றவாளிகள் தப்பலாம்
ஆனால்
ஒரு நிரபராதி
தண்டிக்கப்படக் கூடாது
இது அன்றைய
அறிஞர்களால்
எனக்காக
வகுக்கப்பட்ட கோட்பாடு
ஆனால் இன்று
சட்டத்தின் ஓட்டையை
பயன்படுத்தி
ஆயிரம் குற்றவாளிகள்
தப்பவும் இயலாது
ஒரு நிரபராதி
தண்டிக்கப்படவும் கூடாது
இது என்னினிய
''தோழர்களால்''
எனக்காக இன்று
வகுத்த கோட்பாடு
இனியும் தயங்காதே
என்பக்கம்
திரும்பு
நான் உனக்காக
வாதாடுவேன்
என்னினமே
என்பக்கம் வருவீர்களா ?

— நிலா —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகத்தில் தீர்மானம் எடுத்தல்

*சில தீர்மானங்களைப் பொறுத்து அவை தரமானதாகவும் காணப்படல் வேண்டும் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படுதலும் அவசியமானதாகும். இத்தகைய தீர்மானத்திற்கு நிபுணத்துவ அறிவு அவசியமானதாகும். உதாரணமாக முகாமையாளர் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு, வேலைநிபந்தனைகள் தொடர்பாக எடுக்கப்படும் முடிவினைக்குறிப்பிடலாம்.*

**தேவராஜன் ஜெயராமன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

**அறிமுகம்:** நிர்வாகத்தில் ஈடுபடும் சகலரும் தீர்மானம் எடுத்தல் தொடர்பான ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். தீர்மானம் எடுப்பதில் ஆற்றலைக் கொண்டிருப்பவர்களே சிறந்த நிர்வாகிகளாகக் காணப்படுகின்றனர். சிறந்த தலைவராக விளங்குகின்றனர். பிறரை வழிநடத்துவதில் சிறந்தும் விளங்குகின்றனர். இது அனுபவரீதியாகக் கண்டறியப்பட்ட உண்மையாகும். தீர்மானத்தினை எடுக்கும் திறன் ( Decision Making Skill ) நிர்வாகிகளுக்கு மிக அவசியமானதாகும். இத்திறனை ஒருவர் பிறப்பினால் பெற்றுக் கொள்கின்றார். என்ற கருத்து பலர் மத்தியில் காணப்படுகின்றது. எனினும் இதனை முழு அளவில் ஏற்றுக்கொள்ளமுடியாது. இத்திறனை ஒருவர் விருத்தி செய்ய முடியும் எனக்கூறுவதே பொருத்தமானதாகும்.

தீர்மானம் எடுத்தல் எதிர்காலத்துடன் தொடர்புடையது. எதிர்காலம் நிச்சயமற்றதும் ஆபத்தும் ( Risk ) கூடியதாகும். எனவே தீர்மானம் எடுத்தல் செயற்பாடு ஆபத்துக்களை உள்ளடக்கியது எனக் கூறுவதும் பொருத்தமானதாகும். எனவே தீர்மானத்தினை எடுக்கும்போது கூடிய அவதானமும். எதிர்காலம்பற்றிய எதிர்வு கூறல் அல்லது தொலைநோக்கும் அவசியமானதாகும்.

தீர்மானம் எடுத்தல் எனப்படுவது பிரச்சினை தொடர்பாக பல மாற்றுவழிகளில் இருந்து ஒரு மாற்று வழியினைத் தெரிவு செய்வதனைக் குறிக்கின்றது. தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் எடுத்தல் தொடர்பான செய்முறை நான்கு படிகளைக் கொண்டது.

(i) பிரச்சினையினை அடையாளம் காணலும் அதற்கான காரணங்களை அறிதல்.

(ii) தீர்மானம் தொடர்பாக பல மாற்று வழிகளைத் தோற்றுவித்தல்.

(iii) மாற்றுவழிகளை மதிப்பீடு செய்தல்

(iv) சிறந்த மாற்றுவழிகளைத் தெரிவு செய்தலும் பின்பற்றுதலும்.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| பிரச்சினையினை அடையாளம் காணல் | மாற்றுவழிகளைத் தோற்றுவித்தல் | மாற்றுவழிகளை மதிப்பீடு செய்தல் | சிறந்த மாற்றுவழியினைத் தெரிவுசெய்தலும் பின்பற்றுதலும் |

தீர்மானம் எடுத்தலின்போது மேற் குறிப்பிட்ட நான்கு பிரதான படிமுறைகளையும் பின்பற்றப்படுவதனை விட, அவை சரியாகவும் சிறந்த முறையிலும் பின்பற்றப்படுவது மிக அவசியமானதாகும். தீர்மானம் எடுப்பதில் முதல்படியாக பிரச்சினையினை அடையாளம் காணல் காணப்படுகின்றது. தீர்மானம் எடுப்பவர் முதல் பிரச்சினையினை சரியாக விளங்கிக் கொள்ளல் வேண்டும். பிரச்சினையினை சரியாக விளங்கிக்கொள்ளக்கூடிய அறிவினை தீர்மானம் எடுப்பவர் கொண்டிருத்தல் அவசியமானதாகும். நிர்வாகத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கவேண்டியிருக்கும். வளங்களை எவ்வாறு ஒதுக்கீடு செய்வது? எந்த சொத்தினைக் கொள்வனவு செய்வது? ஊழியர்களை ஊக்குவிக்க எந்த முறையினைப் பின்பற்றுவது? எனப்பல்வேறு விடயங்கள் தொடர்பாக தீர்மானத்தினை எடுக்கவேண்டி இருக்கும். பிரச்சினையினை சரியாக விளங்கிக் கொள்ளாத ஒருவரால் சிறந்த தீர்மானத்தினை நிறைவேற்றமுடியாது. அத்துடன் பிரச்சினையினை அடையாளம் காணல் தீர்மானம் எடுத்தல் தொடர்பான செய்முறையில் முதற்படியாகும். எனவே இப்படிமுறை சரியாக மேற்கொள்ளப்படாவிடின், ஏனைய படிமுறைகளிலும் தவறுகள் ஏற்படுவதற்கு வழிவகுத்து, இறுதியாக சிறந்த தீர்மானத்தினை நிறைவேற்றுவதனை தடைசெய்துவிடும்.

பிரச்சினை தொடர்பாக சரியான வினாக்களைக் கேட்பதன்மூலம், பிரச்சினையினை சரியாக விளக்கிக் கொள்ளமுடியும். தொடர்ந்து " ஏன் ( Repetitive WHY ) என்ற வினாவினைக் கேட்பதன் மூலம் பிரச்சினையினை சரியாக விளங்கிக்கொள்ளமுடியும். பிரச்சினையினை முழுமையாக விளங்கிக்கொள்ளல் வேண்டும். முழுமையாக விளங்கி, சகல தகவல்களை யும் பெற்றுக்கொள்ளும் வரை "ஏன்" என்ற வினாவினைக்கேட்டல் வேண்டும். பிரச்சினையினை அடையாளம் காணும் போது பொதுவாக விடும் தவறினை பீற்றர் றக்கர் பின்வருமாறு எடுத்துக்கூறுகின்றார்.

" The most common source of mistakes in management deceisions is the emphasis on finding the right ansewer rather tha the right question " ( Peter Drucber )

பிரச்சினை சரியாக அடையாளம் காணப்பட்டதனைத் தொடர்ந்து, அதற்கு தீர்வு காண்பதற்கான மாற்றுவழிகளைத் தோற்றுவித்தல் வேண்டும். எந்தளவுக்கு அதிகமான மாற்று வழிகளைத் தோற்றுவிக்கமுடியுமோ அந்தளவிற்கு சிறந்த தீர்மானத்தினை நிறைவேற்றமுடியும். அதிகளவிலான மாற்று வழிகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு கடந்தகால அனுபவங்களைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்

# திறவு கோல்

துடன் ஏனையோர்களின் கருத்துக்களிற்கு அதாவது அத்துறைசார்ந்தவர்களிடம் இருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். குழுக்களை அமைத்து மாற்றுவழிகளைத் தோற்றுவிக்கும்படி கேட்கலாம். சஞ்சிகைகள் என்பவற்றினை வாசிப்பதன் மூலம் மாற்றுவழிகளைத் தோற்றுவிக்கலாம். தனி ஒருவர் தீர்மானத்தினை மேற்கொள்ளும்போது மாற்றுவழிகளைத்தோற்றுவிப்பதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். ஓர் இடத்தில் இருந்து உங்கள் மனதில் இருந்து தீர்மானமாக ஏற்புடைய சகல மாற்றுவழிகளையும் எழுதிக்கொள்ளல் வேண்டும். மனதில் இருந்து வெளிவரும் தகவல்களை தணிக்கை செய்ய (Censor) முற்படக்கூடாது.

அடுத்து விருத்தி செய்யப்பட்ட மாற்றுவழிகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். பல மாற்றுவழிகள் காணப்படினும் அதில் ஒன்றையே தீர்மானமாக நிறைவேற்றமுடியும் எனவே ஒவ்வொரு மாற்றுவழியினையும் தனித்தனியாக மதிப்பீடு செய்தல் வேண்டும். இவ்வாறு மதிப்பீடு செய்யும்போது ஒவ்வொரு மாற்று வழியினதும் பலங்களையும், பலவீனங்களையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். சில மாற்றுவழிகளை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றதாகக்காணப்படும். சிலவேளைகளில் அவற்றினைப்பின்பற்றுவது கூடிய செலவு உடையதாகக் காணப்படலாம். சில வேளைகளில் சில மாற்றுவழிகள் நிறுவனத்தின் கொள்கைகளுடன் முரண்பட்டுக் காணப்படலாம். சிலமாற்றுவழிகளைப் பின்பற்றக் கூடிய காலம் தேவைப்படலாம். எனவே உடனடித்தீர்மானத்தினை நிறைவேற்றும் பொருட்டு தீர்மானமாக நிறைவேற்றமுடியாத நிலை ஏற்படலாம். எனவே ஒவ்வொரு மாற்றுவழியிலும் காணப்படும் பலன்கள் பலவீனங்களைத்தனித்தனியாக கருத்தில் கொண்டு சிறந்த மதிப்பீட்டினை மேற்கொள்ளல் அவசியம், எம்மாற்றுவழி கூடிய பலங்களையும், குறைவான பலவீனங்களையும் கொண்டுள்ளதோ அதுவே சிறந்த மாற்றுவழியாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாகும். அதனை தீர்மானமாக நிறைவேற்றி, அதனை அமுல்ப்படுத்தல் வேண்டும். சிறந்த தீர்மானமானது நிறைவேற்றப்பட்டதுடன் அதன் பலனைப் பெறமுடியாது. அதன் வெற்றி சரியான முறையில் அமுல்ப்படுத்தப்பட்டு பின்பற்றப்படும்போதுதான் அடையப்படுகின்றது.

எடுக்கப்படும் தீர்மானமானது தரமானதாகக்காணப்படுவதுடன், அது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படுதலும் அவசியமானதாகும். எனினும் சிலவேளைகளில் தீர்மானமானது தரத்தினைவிட, அதிகளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படுதல்வேண்டும். என்பது முக்கியத்துவம் பெறுகிறது. இத்தகைய தீர்மானத்தினை நிறைவேற்ற அதிகளவு தொழில்நுட்ப அறிவு வேண்டப்படுவதில்லை. உதாரணமாக அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு தேனீர் இடைவேளை (Tea Break) தொடர்பாக முகாமையாளர் தீர்மானத்தினை நிறைவேற்றும்போது அது அலுவலக ஊழியர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதா என்பதிலேயே கூடிய கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும், இத்தகைய தீர்மானத்தினை மேற்கொள்ளுவதற்கு நிபுணத்துவ அறிவு அவசியமில்லை.

சில தீர்மானங்களைப் பொறுத்து அவை தரமானதாகவும் காணப்படல் வேண்டும். சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படுதலும், இத்தகைய தீர்மானத்திற்கு நிபுணத்துவ அறிவு அவசியமானதாகும், உதாரணமாக முகாமையாளர் ஊழியர்களின் சம்பளக்கொடுப்பனவு, வேலைநிபந்தனைகள் தொடர்பாக எடுக்கப்படும் முடிவினைக்குறிப்பிடலாம்.


சிலதீர்மானங்கள் தரமானதாகவோ அன்றி சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்ற அவசியமோ இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஒரு அலுவலகத்தில் சுத்திகரிப்பு தொடர்பாக ஒழுங்கினை மேற்கொள்ளும் பொருட்டு எடுக்க வேண்டிய தீர்மானத்தினைக் குறிப்பிடலாம்.

சிலதீர்மானங்கள் கூடியளவு தரமானதாகக் காணப்படுதல்வேண்டும். கூடியளவிற்கு ஏற்புடையதாகக் காணப்படல் வேண்டும் என்ற அவசியமில்லை. இத்தகைய தீர்மானத்தினை மேற்கொள்ள அதிகளவு நிபுணத்துவ அறிவு அவசியம் உதாரணமாக முகாமையாளர் ஒருவர் மூலப்பொருள் கொள்வனவு தொடர்பாக தீர்மானத்தினை மேற்கொள்ளும்போது இத்தீர்மானமானது தரமானதாக காணப்படுதல் வேண்டும் என்ற அவசியம் உண்டு. ஆனால் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்ற அவசியமில்லை. எனவே தீர்மானம் எடுக்கும் போது தரம் ஏனையோரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய அளவு என்பனவற்றினையும் கவனத்தில் கொள்ளல் அவசியமானதாகும்.




நிர்வாகத்தில் ஈடுபடும் தனி ஒருவரினால் எடுக்கப்படும் தீர்மானமானது தவறாக அமையுமாயின் பாரியவிளைவுகளை ஏற்படுத்துவதுடன், பலருடைய விமர்சனங்களுக்கும் ஆளாகவேண்டியநிலை ஏற்படும். அத் தீர்மானம் தொடர்பாக பதில் சொல்லவேண்டிய பொறுப்பினையும் அவரே கொண்டுள்ளார். எனவே தீர்மானத்தினை மேற்கொள்ளும்போது, கவனத்தில் கொள்ளவேண்டிய சில ஆலோசனைகள் வருமாறு:

(i) தீர்மானம் எடுப்பது தொடர்பான படிமுறைகளைக் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு படிமுறைகளையும் சரியாகப் பின்பற்றப்படுகின்றதா என்பதனை உறுதிசெய்தல் வேண்டும்.

(ii) தேவைப்பட்டால் அன்றி அவசரமாக தீர்மானம் நிறைவேற்றுவதில் ஈடுபடுவதனைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

(iii) தீர்மானம் எடுக்கும்போது பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். நடுநிலையாளராகக் காணப்படல் வேண்டும்.

(ii) தீர்மானம் மேற்கொள்ளும்போது, அது தொடர்பாக பிறரால் கேட்கப்படும் வினாக்களுக்கு பதில் சொல்லத் தயாராக காணப்படுகின்றீர்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(i) எடுக்கப்பட்ட தீர்மானத்தினை அறிவிப்பதற்கு முன்பு அதனைச் சரியாக மீளாய்வு செய்க. பிறரின் நிலையில் இருந்து அதனை மீளாய்வு செய்க. உங்கள் உயர் அதிகாரி அல்லது ஊழியர் அல்லது கீழ்பணிபுரியும் ஊழியரின் நிலையில் உங்களை ஈடுபடுத்தி மீளாய்வு செய்து கொள்ளல் வேண்டும்.

(i) தொகுதியாக தீர்மானம் எடுக்கும் ஆற்றலை விருத்தி செய்தல் வேண்டும். தொகுதியாக தீர்மானம் எடுத்தல் எனப்படுவது பலர் ஒன்று சேர்ந்து மாற்று வழிகளைத் தோற்றுவித்து தீர்மானம் எடுப்பதனைக்குறிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். ஜப்பானிய முகாமைத்துவத்தில் இம்முறை பெரிதும் பின்பற்றப்படுகின்றது. தொகுதிரீதியாக தீர்மானம் எடுத்தலில் பல நன்மைகள் காணப்படுகின்றன.

(அ) பலமாற்றுவழிகளைத் தோற்றுவிக்க முடிகின்றது. இதன்மூலம் சிறந்த தீர்மானத்தினை எடுக்க முடியும்.

(ஆ) பிரச்சினை சிக்கலானதாகவும் பெரியதாகவும் காணப்படும்போது தனி ஒருவர் அதனைக் கையாளுவது கடினம் தொகுதியாகத் தீர்மானம் எடுத்தல் இத்தகைய சிக்கல் வாய்ந்த பாரிய பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகின்றது.

(இ) தொகுதியாக தீர்மானம் எடுத்தலில் பலர்பங்கு கொள்வதனால் பக்கச்சார்பிற்கான சாத்தியம் மிகக்குறைவானதாகக் காணப்படும்.

(ஈ) தொகுதியாக தீர்மானம் எடுத்தல் ஜனநாயகத்தத்துவங்களிற்கு மதிப்பு அளிப்பதாக அமைகின்றது.

தீர்மானத்தினை நிறைவேற்றுபவர் ஐந்துவகையான பாணியினை (Style) பின்பற்றமுடியும். அவையாவன

(அ) தனக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தானே தீர்மானம் எடுத்தல்.

(ஆ) தன்கீழ் பணிபுரிபவர்களிடம் இருந்து தேவையான தகவல்களைப் பெற்று தானே தீர்மானம் எடுத்தல்.

(இ) பிரச்சினையை தனிப்பட்ட ஒவ்வொருவருடனும் பகிர்ந்து, அவர்களிடம் யோசனைகளை வரவேற்று தானே தீர்மானம் எடுத்தல்.

(ஈ) தன்கீழ் பணிபுரியும் பணியாளர்களுடன் தொகுதியாக இணைந்து ஆலோசனைகளை வரவேற்று முடிவினை மேற்கொள்ளல்,

(உ) தன்கீழ்ப்பணிபுரியும் பணியாளர்களுடன் தொகுதியாக இணைந்து மாற்றுவழிகளை தோற்றுவித்து தொகுதியாக அவற்றினை மதிப்பிட்டு தொகுதியாக தீர்மானம் எடுத்தல். இறுதிமுறை தொகுதியாக தீர்மானம் எடுத்தல்.

**முடிவுரை:** சிறந்த நிர்வாகி தீர்மானம் எடுத்தல் திறனை விருத்தி செய்தல் வேண்டும். இதன் மூலமே நிறுவனத்தில் சிறந்த நிர்வாகத்தினை ஏற்படுத்தவும், அதன் நோக்கத்தினை அடையவும் முடியும்.

●●

பிறர் செய்த உதவிக்கு
நன்றி தெரிவிப்பவனும்.
தான் செய்த பிழைக்கு
மன்னிப்புக் கேட்பவனும்
போற்றப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம்

இது கற்பனையால் வடிக்கப்படும் ஒரு கதையல்ல,
ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தையை இனம் கண்ட உண்மை நிகழ்வாகும்.
காதல் என்பது சமுதாயத்தில் இன்று புதுமையான விடயம் அல்ல. சங்ககாலம், சங்கமருவிய காலம் தொடக்கம் இன்று வரும்வரை தமிழர்களிடையே குறிப்பாக ஆண் பெண் இடையே உள்ள ஆழமான பற்று காதல் எனலாம். இங்கு எடுத்தியம்பப்பட இருக்கின்ற நிகழ்வின் உண்மையை சட்டமும் யதார்த்தமும் நிலைநிறுத்தியுள்ளன. இங்கு பாவிக்கப்படுகின்ற பெயர்களும் பிரதேசங்களும் மாத்திரமே புனையப்பட்டவையாகும்.

தமிழீழத்தின் எழில்மிகு பிரதேசமாகவும் தொழில் வளம் கொண்டதுமான நெய்தல் நிலத்தில் ஏழைப் பெற்றோருக்கு ஒரேயொரு மகளாக மாதவி பிறந்து வளர்ந்து வந்தாள். இவர்களது குடும்பச் சீவியம் தாய் பிடிக்கும் உள்ளூர் சீட்டிலும் நாட்கூலியுடனும் நகர்ந்து கொண்டு வந்தது இவ்வாறு சீட்டுப்பிடித்து வரும் காலத்தில் கலா என்னும் அயல்வீட்டுப் பெண்ணும் இதில் பங்குகொள்ள அப்பெண்ணுடன் மாதவிக்கு சீட்டுப்பணம் தொடர்பில் பழக்கம் ஏற்பட்டு இருவரது வீடுகளுக்கும் இருவரும் சென்று வந்து நெருக்கிய நண்பர்கள் ஆனார்கள்.

மாதவி கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் கலாவின் சகோதரர்களில் ஒருவரான விஸ்வமும் அதே கல்லூரியில் படித்து வந்தார். கலாவின் சகோதரன் என்ற வழியில் விஸ்வத்துடன் மாதவி பழகத் தொடங்கினாள்.

இவர்கள் இவ்வாறு கல்லூரியில் படித்துவரும் காலத்தில் மாதவியுடன் படித்துக் கொண்டிருந்த சுரேகா என்ற பெண்ணில் விஸ்வம் அன்பு வைத்திருந்தார். விஸ்வத்துக்கும் சுரேகாவுக்கும் இடையிலான கடிதத்தொடர்புகளை மாதவி பரிமாறி வந்தார். இவ்வாறு சுரேகாவின் காதல் வளர்ந்து வரும் காலத்தில் விஸ்வத்துடன் படித்துக் கொண்டிருந்த சிறி மாதவியை விரும்புவதாக விஸ்வம் ஊடாக சம்மதம் கேட்டிருந்தார். இதன் பிரகாரம் மாதவி தன் தாயிடம் பிரச்சனைகளை ஒளிவு மறைவின்றி மனம் விட்டுக் கதைத்தார். மாதவியின் தாய் சிறியைச் சந்தித்து குடும்பக் கஸ்டத்தை விளக்கி சிறிது காலம் பொறுக்கு மாறும் காலம் வரும்போது திருமணம் முடித்துத் தருவதாகவும், கூறியதன் பிரகாரம் மாதவியின் காதலுக்கு விஸ்வம் கடிதப்பரிமாற்றம் செய்து வந்ததினால் இவர்களுக்கிடையில் நெருங்கிய சகோதரத்துவ பாசம் உருவாகியது மாதவி சிறி காதல் இரண்டு வருடங்களாக தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் இருவர்கிடையில் சில முரண்பாடுகள் தோன்றி இவர்களுடைய காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்
## திறவு கோல்

முறிந்து பின்னர் விஸ்வமும் மாதவியும் முன்னைய பழக்கத்தினாலும் விஸ்வத்தின் சகோதரியான கலா வெளிநாடு சென்றதினால் அங்கு சென்று இடையிடையே உணவு சமைக்க உதவிகள் செய்வதினாலும் இவர்கள் தனிமையும், இவர்கள் பழக்கம் மற்றவர்களால் அறிவுறுத்தப்படாததினாலும் சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்படுத்திய விளைவால் மாதவி தாய்மை அடைந்தாள். ஆனால் மாதவி தாய்மையடைந்ததற்கு தான் காரணம் இல்லையென விஸ்வம் கூறியதன் பிரகாரம் தமிழீழ நீதிமன்றில் தமிழீழ சட்டக்கோவை திருமண ஏமாற்றுப் பிரிவு 03க்கு அமைய விஸ்வம் காதலித்து தாய்மையடையச் செய்து ஏமாற்றியதற்கு குற்றம் சாட்டப்பட்டார்.

அங்கு நடைபெற்ற சில முக்கிய விசாரணைப் பகுதிகளின் சுருக்கத்தை நாம் இங்கு பார்ப்போம். சிறிக்கும் மாதவிக்கும் இடையிலான காதல் தொடர்பு 1989ல் ஏற்பட்டிருந்த போதிலும் தாயின் பணிப்பின் பிரகாரம் தனிமையில் பழகுவதைத் தவிர்த்திருந்தார் மாதவி கதைக்க வரும்படி கேட்டிருந்தும் மாதவி அவ்வாறு நடக்காததால் 1991ம் ஆண்டு மாசி மாதம் விஸ்வம் ஊடாக மாதவிக்குக் கடிதம் ஒன்று வந்தது அக்கடிதத்தில் மாதவியை சிறி வெறுப்பதாகவும். தன்னை மறக்கும்படியும் எழுதப்பட்டு இருந்ததினால் அன்றிலிருந்து சிறிக்கும் மாதவிக்கும் இருந்த காதல் தொடர்பு முற்றுப் பெற்றது மாதவியின் காதலும், விஸ்வத்தின் காதலும், நிலைத்திருந்த வேளையில் மாதவியின் வீட்டிற்கு விஸ்வம் வருவதும், மாதவி விஸ்வத்தின் வீட்டிற்குச் சென்று கதைப்பதும், சில வேளையில் அங்கு சமையலுக்கு உதவி செய்வதும் வழக்கமாகியது. அவ்வாறே மாதவியின் காதல் முறிவடைந்த பின்னரும் இவர்களுக்குள்ளே முன்னைய சகோதர பழக்கங்கள் தொடர்ந்தன. அவ்வாறு இருக்கின்ற காலகட்டத்தில் கலாவுக்கு வெளிநாட்டில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு போகும் வேளையில், தங்களது பெற்றோருக்கும் சகோதரருக்கும் துணையாக இருங்கள் என்றும், உங்களை நம்பியே வீட்டை விட்டுப்பிரிகிறேன் என்றும் மாதவியின் பெற்றோரைப்பார்த்து கலா இரந்து கேட்டார். வெளிநாடு செல்லும்போது அவரது தாய்க்கு சத்திரசிகிச்சை செய்து ஓரளவு மாறிய பின்பு சென்றமையால் மாதவியும் அவரது தாயாரும் விஸ்வம் வீட்டில் சமையல் வேலைகளை கவனித்து வந்திருந்தனர். அக்காலத்தில் விஸ்வம் பரீட்சைக்காக அண்மையில் உள்ள அப்பம்மாவின் குடிசையில் படித்துக் கொண்டு இருப்பார். விஸ்வத்தின் வீடும் அப்பம்மாவின் குடிசையும் ஒரு எல்லையாலே பிரிக்கப்படுகின்றது. விஸ்வம் படித்துக் கொண்டிருக்கும் வேளையில் விஸ்வத்திற்கும் மாதவிக்கும் இடையிலான சகோதர பழக்கத்தால் அவருக்குத் தேனீர், சாப்பாடு போன்றவை பரிமாறுவது மாதவியின் செயற்பாட்டில் ஒன்றாகியது இதனால் இருவரது பழக்கமும் மேலும் இறுக்கமானதுடன் யாரும் ஐயம் கொள்ளாது அறிவுறுத்தப்படாது விடப்பட்டனர். காலை 10.00 மணி அல்லது 10.30 மணிக்கு விஸ்வம் வீட்டிற்குச் செல்லும் மாதவி பி.ப 1.00 மணி அல்லது

★★ *நேர்மையானவர்களாக நடிப்பதை விட நேர்மையாக இருப்பவர்களையே நான் விரும்புகிறேன்.*

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**திரு. வே. பிரபாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்

## திறவு கோல்

2.00 மணிக்கே தனது வீட்டில் காலடி எடுத்து வைப்பார். விஸ்வத்தின் தமையனும், தந்தையும் வேலைக்குச் சென்றுவிடுவதும். அந்நேரங்களில் தாய் வைத்தியசாலைக்கும் தம்பி பாடசாலைக்கு சென்றுவிடுவதும் மாதவியும் விஸ்வமும் தனிமையில் இருக்க வழிகோலியது. அண்மையில் அப்பம்மா இருந்த போதிலும் வயது முதிர்ச்சியும் கண்பார்வைக் குறைவும் அவர் இல்லாதது போலவே காட்டிக் கொண்டது. சூழல் ஏற்படுத்திய சந்தர்ப்பமும் இருவரது வாலிப வயதும் மாதவியை தாய்மையடையும் நிலைக்குத் தள்ளிவிட்டது. மாதவியும் விஸ்வமும் இவ்வாறு பழகுவதில் தவறேதும் நிகழுமோ என்றெண்ணிய சுரேகா மாதவியுடனான தனது சிநேகிதத்தை படிப்படியாக முடிவுக்குக் கொண்டுவந்து கடைசிக் காலங்களில் நிலையான ஓர் முற்றுப்புள்ளியை வைத்தார். மாதவியின் தாய்மைபற்றி ஊரார் அறியக்கூடிய நிலை ஏற்பட்டதும் சுரேகாவிற்கும் அச்செய்தி மெல்ல செவியினுள் புகுவதற்குத் தவறவில்லை. மாதவியுடன் சந்தர்ப்பவசம் காரணமாக நடந்த தவறுகளை, உத்தியோக பூர்வமாக சுரேகாவுடன் நடக்க விஸ்வம் தவறவிடவில்லை. இதனால் இரு பெண்களும் விஸ்வத்தைத் தவிர வேறு ஆடவருடன் தமது வாழ்க்கையை நிர்ணயிக்க விரும்பவில்லையாதலால் இருவரின் நெருக்குதலுக்கும் விஸ்வம் உட்பட்டு செய்வதறியாது தட்டுத் தடுமாறினார். ஒரு புறம் சந்தர்ப்ப வசம் காரணமாக நடந்த தவறினால் பெண்மையையிழந்து தாய்மையடைந்திருக்கும் சாட்சியற்ற அப்பாவி மாதவி, மறுபுறம் 04. 05 வருடங்களுக்கு மேலாக சான்றுகள் சாட்சிகள் கொண்ட சுரேகாவின் காதல், சமுதாயத்தில் ஓரளவு படித்தவர்க்கமும் அஸ்தஸ்தும் கௌரவமும் கொண்ட விஸ்வத்தின் குடும்பத்தில் விஸ்வம் சமுதாயக் குழந்தைகளுக்கு அறிவு புகட்டும் ஓர் உன்னதமான பணியையே மேற்கொண்டு வந்தார். இதனால் மாதவியுடனா? சுரேகாவிடனா? தனது வாழ்க்கையை நிர்ணயிப்பது என்பதை மிகவும் ஆழமாகவே சிந்தித்துச் செயற்படுத்தினார். மாதவியைச் கூட்டிச் செல்வதாக யாருக்கும் தெரியாமல் வாக்குறுதியளித்து நடந்தது நடந்துவிட்டது. எனும் அடிப்படையில் மீண்டும் தொடர்ந்து மாதவியுடன் கலவியில் ஈடுபட்டார். மாதவியின் நெருக்குதல் காரணமாக அவருக்கு இரு கடிதங்களை வரைந்து குறித்த ஓர் திகதியில் கூட்டிச் செல்வதாக நம்பிக்கையூட்டினார். நாட்கள் நகர்ந்து மாதங்களை உருட்டிக்கொண்டே சென்றது குழந்தையைப் பெற்றெடுக்கும் காலத்தை மாதவி அண்மித்துக் கொண்டிருந்தாள். இவ்வாறான நிகழ்வின் ஓர் நாள் சுரேக்கா தன்மீது வழக்குப்போட்டுள்ளதாயும் அவரைக் காதலிக்கவில்லை என நிரூபிக்க இக்கடிதங்கள் தேவை என்றும் அவ்விரு கடிதங்களையும் மாதவியிடம் இருந்து விஸ்வம் பெற்றுக்கொண்டார். வயிற்றில் உள்ள குழந்தையின் தந்தையை நிர்ணயிக்கும் இரு கடிதங்களையும் தான் இழந்துவிட்டேன் என்று முடிவுக்கட்டத்திலேயே உணர்ந்தார் மாதவி. மாதவியை அழைத்துச் செல்வதாக இருந்த அதே நாளுக்கு முன்னரான நாளில் தனது பணிநிலை, குடும்ப அந்தஸ்து, கௌரவம் என்பவற்றைக் கருதி விஸ்வம் சுரேகாவுடன் தலைமறைவானார் பின்னர் அவர்கள் பதிவுத் திருமணமும் செய்து கொண்டனர். தன்னையே கூட்டிச் செல்வார் என நம்பியிருந்த மாதவி நிலைமையை நன்குணர்ந்து தனது நடவடிக்கையைத் துரிதப்படுத்தி பெற்றோருக்குத் தெரியப் படுத்தினார். இது தொடர்பாகப் பெற்றோர் விஸ்வத்தின் நெருங்கிய உறவினர்களுடன் கதைத்தனர். அவர்கள் விஸ்வத்தினை விசாரித்தபோது விஸ்வம் மறுப்புத் தெரிவிக்கவே நீதிமன்றில் வழக்கு காலடி பதித்தது. இதன் பின்பு விஸ்வத்தின் நெருங்கிய உறவினர் வழக்கை மீளப்பெறுமாறும் தாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்

# திறவுகோல்

ஒற்றுமையாக்கி விடுவதாகவும் கேட்டிருந்தும் மாதவி சார்ந்தோர் மறுத்து வழக்கைத் தொடர்ந்தனர். சமுதாயப் பிரச்சனைகளில் மிகவும் சிக்கலான பிரச்சனை இப்படிப்பட்ட பிரச்சனைகளாகும். எல்லா நிகழ்வுக்கும் சான்றுரைஞரையோ சான்றுகளையோ தேடமுடியாது ஆனாலும் சில சில நிகழ்வுகளுக்கு சான்றுரைஞர்கள் அல்லதுசான்றுகள் கொண்டு இருக்கலாம் வயது முதிர்ச்சியாலும் அறிவுமுதிர்ச்சியின்மையாலும் ஏற்கனவே மாதவிக்கு இருந்த வருத்தத்தினாலும் அவர் மேல் கொண்டிருந்த நம்பிக்கையாலும் மாதவியின் உடல் நிலை பருத்த போது அவரின் பெற்றோர் கவனிக்கத் தவறிவிட்டனர். இதனால் நீதிமன்றிலே அவர்குழந்தையுடன் தோன்றி தனக்கு நிவாரணம் கிடைக்காவிட்டாலும் தன் பிள்ளையின் தந்தையை உறுதி செய்வதிலே முனைப்பாக இருந்தார். சான்றுரைஞர்கள் சான்றுகள் எதுவும் இன்றி வழக்கு உருண்டோடிக் கொண்டு இருக்கின்ற வேளையில் விஸ்வத்தின் நெருங்கிய உறவினரால் மன்றிற்கு ஓர் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. சுரேகா மீது அன்பு வைத்திருந்த காலப்பகுதியில் தனது வீட்டில் வந்து பழகிய மாதவியுடன் சந்தர்ப்ப வசம் காரணமாக தவறாக நடந்து விட்டேன் என்றும் இதனால் அக்குழந்தைக்குத் தானே தந்தை என்றும் விஸ்வத்தால் அக்கடிதம் வரையப்பட்டு இருந்தன. மாதவியுடன் தான் சகோதரம் மாதிரியே பழகியதாகவும் சுரேக்காவிற்கும் தனக்கும் இடையிலான கடிதப் பரிமாற்றங்களை மாதவியே செய்து வந்திருந்தார் என்றும் கூறி குறித்த கடிதம் பயத்தின் பிரகாரமே தனது நெருங்கிய உறவினருக்கு தன்னால் எழுதப்பட்டதாகவும் விஸ்வம் கூறி மறுத்தார். எனினும் சான்றுரைஞர்களின் கூற்றில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலையும், வாலிப உணர்வும், விஸ்வத்தால் எழுதப்பட்ட கடிதமும் நடந்த நிகழ்வை உறுதிப்படுத்த விஸ்வம் குற்றவாளியாகி சட்ட நடவடிக்கைக் குட்படுத்தப்பட்டார்,

— அன்பு —

எமது எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள். எமது எதிரியையும் அவனது நோக்கத்தையும் நாம் இனங்கண்டு கொள்வது சுலபம். ஆனால் எமது துரோகிகள் முகமூடி அணிந்து நடமாடுகின்றார்கள். எதிரியின் கைப்பொம்மைகளாக செயற்படுகிறார்கள். தமது சுயநலத்திற்காகவும், வர்க்க அபிலாசைகளுக்காகவும் சொந்த இனத்தையே காட்டிக் கொடுக்கத் தயங்காத இந்த ஆபத்தான பிற்போக்கு சக்திகள் மீது எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

— தமிழீழத் தேசியத் தலைவர் —

( எமது மக்களின் விடுதலைக்காக தொகுப்பிலிருந்து )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயல் அட்பார் எனப்படுவது நீதிமன்றுகளில் இடம்பெறுகின்ற ஒருவகை விளக்க முறையாகும் இந்த வகையான விளக்கங்கள் பெரிதும் யூரர்களைக் கொண்டு விளக்கம் நடத்தும் ஒழுங்கைக்கொண்ட நீதிமன்றுகளிலேயே இடம்பெறும். ஏனெனில் இது யூரர்சபை விளக்கத்திற்கு (ரயல் பை யூரி (TRIAL BY JURY) நேர் எதிரான ஒரு விளக்க முறையாகும்.

மான நோக்கம் சட்டத்தினைப் பிழையாகப் பொருள்கோடல் செய்யப்படுவதைத் தடுப்பதற்காக அல்லது சட்டம்பற்றிய தெளிவான விளக்கத்தினைக் கொடுத்து குறித்த பிணக்கிற்கு, ஏற்புடைய சட்டப்படி மிகச்சரியான ஒரு தீர்ப்பை கொடுப்பதற்காகவே ஆகும். ரயல் அட்பார் விளக்கத்தினால் கொடுபடும் தீர்ப்பு முழுவதும் சட்ட எல்லைகளில் மீது நின்று கொடுபடுவதனால் இது சிறப்பானதும் தெளிவானது மான ஒரு விளக்க முறையாகும் ஏனெனில் பூரணசட்ட அறிவுடைய நீதிபதிகள் இதனை ஆராய்வார்கள் ஆதனால் இங்கே ஐயம் ஏற்படாதவாறு சட்டத்தின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்யும் வகையினில் இவ் விளக்கம் அமைந்து காணப்படுகின்றது.

# யூரரில்லா நீதிமன்ற விளக்கம்

(ரயல் அட் பார் TRIAL-AT-BAR)

அதாவது ரயல் அட்பார் எனும் விளக்கம் யாரால் நடாத்தப்படுகிறது; எங்கு நடத்தப்படுகின்றது, ஏன் நடத்தப்படுகின்றது அதன் அனுகூலங்கள் எவை போன்ற விடயங்களை ஆராய்கையில் இதனை இனம் காணலாம்.

இதில் இவ்வகை விளக்கம் முழுவதும் சட்ட அறிவுடைய நீதிபதிகளைக்கொண்ட நீதிமன்ற அமர்வுகள் முன்பே இடம்பெறும் இது யூரர்களை அமர்த்தி அவர்கள் முன் விளக்கம் நடத்தப்படும் ஒழுங்கிற்கு மாறாகச் செயற்படுத்தப்படுகின்ற முறை இவ்வகை விளக்கம் பெரும்பாலும் சிறிலங்கா போன்ற நாடுகளில் மேல் நீதிமன்றிலேயே (HIGH COURT) இடம்பெறுகின்றது. இவ்வாறான நீதிமன்றுகள் உயர்ந்த குற்றவியல் சார்பிணக்குகளை ஆராயும் தகுதி உடையனவாய் உள்ளமையால் அங்கே இத்தகைய விளக்கம் நிகழ்த்தப்படுகின்றது, என்பதுடன் இது பெரும்பாலும் குற்றவியல் சார்ந்த விடயங்களோடு தொடர்புபடுகின்ற ஒருவகை விளக்கமாகவே அமைகின்றது.

இவ்வாறான ஒரு ரயல் அட்பார் விளக்கம் ஒன்று நடத்தப்படுவதன் பிரதான

சிறிலங்காவில் இதுவரை இந்த விளக்கங்கள் மூன்று இடம் பெற்றுள்ளன. இம் மூன்று விளக்கங்களிலும் கவனிக்கப்படக் கூடியதாயுள்ள ஒரு விடயம் என்னவெனில் சட்டத்தில் அப்படியே பொருள்கோடல் செய்யப்பட்டவாறு குறித்த வழக்குகளை நகர்த்தியமை ஆகும். யூரர் முன்னரான விளக்கம் ஒன்றில் சந்தேகநபர் சில வேளை தப்பிப்போக வாய்ப்புண்டு. ஏனெனில் யூரர்கள் சட்ட அறிவு அற்றவர்கள் அவர்கள் தம் இயற்கை அறிவினாலேயே தீர்ப்பிடுகின்றனர்கள். ஆனால் ரயல் அட்பார் விளக்கத்தில் அவ்வாறு இடம்பெற ஒரு பொழுதும் வாய்ப்பில்லாமை ஒரு சிறப்பம்சமாகும். இத்தகைய விளக்கங்கள் அனுமதிக்கப்படுவதனால் மிகச்சரியான நீதி செலுத்திச் செல்வதனை அவதானிக்க முடியும் எனினும் வலுவேறாக்கக் கோட்பாடு சரியாகப் பேணப்படாத சில நாடுகளில் அரசியல் வாதிகளின் கருத்துக்களைச் சுமக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் ஓர் விளக்கமாகவும் இது அமைந்துள்ளது சரியாக வலுவேறாக்கம் பேணப்படுமெனில் இது ஒரு சிறப்பு விளக்க முறை என்பதில் ஐயமில்லை.

இது இங்கிலாந்தில் பின்பற்றப்படுகின்ற ஓர் விளக்க முறையாகும். அனேக நாடுகளில் இம்முறை ஏற்கப்பட்டுள்ளது என்பதுடன் தமிழீழத்தில் இவ்வகையான விளக்கங்கள் பகுத்துபார்க்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இங்கே நடைபெறுகின்ற விளக்கங்கள் யாவும் சட்ட அறிவுடைய நீதியாளர்கள் முன்னிலையிலே இடம் பெறுவதால் இத்தகைய ஒரு பாகுபாடு தற்போது அவசியமற்ற ஒன்றாய் உள்ளது.

எப்படி இருப்பினும் ரயல் அட்பார் எனும் யூரரில்லா நீதிமன்ற விளக்க முறைமை நிறை அனுகூலங்களை உடைய ஒரு விளக்கமுறை என்பதில் ஐயமில்லை.

— மதிவர்மன்

## உங்களுக்காக

உங்கள் ஆற்றலை வெளிக்கொணரவும் கருத்துக்களை வெளியிடவும் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும் இப் பகுதியில் பின்வரும் இரு விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

01) விவாத அரங்கு

கீழே தரப்படும் தலைப்பை ஆதரித்தும் எதிர்த்தும் உங்களது கருத்துக்களை எழுதினால் அதில் தரமான கருத்துக்கள் அடுத்த சஞ்சிகையில் வெளியிடப்படும்.

தலையங்கம் :- சீதனம் ஒரு சமூகச் சிறுமை

★★★ நட்டச்சுத் தாளில் மூன்று பக்கங்களைக் கொண்டதாக உங்கள் கருத்துக்கள் அமைந்திருப்பது சிறப்பானதாகும்.

02) பிணக்கிற்கு தீர்வு காணல்

சட்டம் தொடர்பான சந்தேகங்களையும் பிரச்சனைகளையும் எழுதி அனுப்பினால் அதற்கான சட்ட ஆலோசனை வழங்கப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :-

சட்டத்தின் திறவுகோல்
நடுவப்பணியகம்
நீதி நிர்வாகத்துறை
பொற்பதி வீதி
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலம் தொட்டு இன்று வரை தமிழீழ வளர்ச்சிக் காகவும், முன்னேற்றத்திற் காகவும் எமது தேசியத் தலைவர் காலத்திற்குக் காலம் இயக்க நடவடிக்கை களில் மாற்றங்களைச் செய்து வந்துள்ளார் அந்த வகையில் 1992ம் ஆண்டு எமது இயக்கத்தின் செயற் பாடுகளை ஆறு பெரும் துறைகளாகப் பகுத்தார். அதில் ஒன்று நீதி நிர்வாக கத்துறையாகும்.

அனைத்துலக நீதி முறை களோடு ஒத்திசைவான முறையில் ஆரம்பிக்கப் பட்டு, நீதி செலுத்தப்படு கின்றது.

நீதிமன்றுகள் ஆரம்பிக் கப்படுவதற்கு தேவைப் படும் முழுமையான சட்டப் புத்தகங்கள் எம்மால் ஆக் கப்பட்டிருக்கவில்லை. எனவே தற்காலிகமாக ஒரு சட்டக்கோவை ஆக்கப்பட் டது. இது ஒரு முழுமை யான சட்டக்கோவையாக இல்லாவிடினும், குடியியல் குற்றவியல் விடயங்களும், இவற்றின் நடவடிக்கை

# சட்ட நூல்களின் அறிமுகம்

எமது மக்களுக்கு நீதி யும், நியாயமும் கிடைக்க வேண்டும் என்று காலத் திற்கு காலம் நீதி செலுத் துவதற்காக அமைப்புக்கள் விடுதலைப்புலிகளால் நிறு வப்பட்டு வந்திருக்கின்றது அதன் வளர்ச்சிக் கட் டமாக இத்துறை ஆரம்பிக்கப்பட்டுள் ளது. கடந்த காலங்களில் செயற்பட்ட நீதி முறை களில் படிமுறை வளர்ச்சி யின் ஊடாக இத்துறை ஆரம்பிக்கப்பட்டது. இது

களும் வீதிப்போக்குவரத்து தொழிற் பிணக்குகள் போன்றவைகளை கணிச மான அளவு உள்ளடக்கிய தாக ஆக்கப்பட்டது. இக் கோவையின் ஊடாகவே மக்கள் நீதித்துறையின் வெளிப்படையான செயற் பாடுகளை முதலில் அறியக் கூடியதாக இருந்தது என் பதுடன் நீதிமன்றங்களின் பிரவேசத்திற்கு வழிகாட்டி யாக அமைந்தது. இச்சட் டக்கோவை நடைமுறைக்கு வந்தபின், ஏற்பட்ட நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தின் திறவுகோல்

முறைப் பிரச்சனைகள் காரணமாக, இக்கோவைக்கான திருத்தம் ஒன்றும் கொண்டு வரப்பட்டது. இது 1993ம் ஆண்டின் 02ம் எண்சட்டம் என வெளியிடப்பட்டது'

இதற்கடுத்ததாக 1993ம் ஆண்டின் 03ம் எண் சட்டமாக தமிழீழ தேசவழமைச் சட்டம் ஆக்கப்பட்டது. பழைய தேச வழமைச் சட்டத்தில் காலங் காலமாக பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த பெண் அடிமை, சொத்துக்கள் சென்றடையும் வழிமுறை போன்றவற்றில் முற்போக்கான விடயங்களை உட்புகுத்தி எமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வகையில் இச் சட்டம் புதிய பாங்கில் ஆக்கப்பட்டது.

அதேபோல் 1993ம் ஆண்டின் 04ம் எண்சட்டம் யாழ் குடா நாட்டிற்குள் விறகு வெட்டுவதை ஒழுங்குபடுத்தும் சட்டமாக உருவாக்கப்பட்டது தற்போது உலக நாடுகள் சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற இக்காலத்தில் எமது யாழ் பிரதேசத்தில் உள்ள கண்டற் காடுகளும், பச்சை மரங்களும் விறகிற்காக அழிக்கப்பட்டு வருவதை ஒழுங்குபடுத்துவதற்காகவும், சூழலைப் பாதுகாப்பதற்காகவும் இச்சட்டம் வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுச் சட்டம் 1993ம் ஆண்டு 05ம் எண் சட்டம் என ஆக்கப்பட்டது சாதாரணமாக ஒரு நாட்டில் நடைபெறுகின்ற வாகனப் பதிவு, அனுமதிஅட்டை வழங்கல் போன்ற விடயங்களை இது கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றது.

எமது இன்றைய சமுதாயம் தென் இந்திய சினிமாவாலும் ஏனைய ஆபாசமான சினிமாக்களாலும் தற்காலத்திலும், எதிர்காலத்திலும் தோற்றுவிக்கப்படும் எமது சமூக கலாச்சார சீரழிவுகளை தடுக்கும் முகமாக 1994ம் ஆண்டின் 1ம் எண் சட்டமான திரைப்படங்கள் தணிக்கைச் சட்டம் வெளியானது

அடுத்ததாக 1994ம் ஆண்டின் 02ம் எண் சட்டமாகிய 1993ம் ஆண்டின் 01ம், 02ம், 03ம் எண் சட்டங்களுக்கான திருத்தச் சட்டம் வெளியிடப்பட்டது. இது மேற்படி சட்ட நூல்களில் ஏற்பட்ட நடைமுறைப் பிரச்சனைகளை கருத்தில் எடுத்து அதற்கான திருத்தமாக ஆக்கப்பட்டது. பின்னர் 1994ம் ஆண்டின் 03ம் எண் சட்டம் எனும் தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்று நடவடிக்கைச் சட்டம் ஆக்கப்பட்டது இச் சட்டப்படி தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு ஒரு நாட்டில் உயர் நீதிமன்றத்திற்கு உள்ள நியாயதிக்கம் வழங்கப்பட்டுள்ளதோடு அதன் நடவடிக்கைகளும் எடுத்துக் இயம்பப்பட்டுள்ளது.

அடுத்து 1994ம் ஆண்டின் 04ம் எண் சட்டம் என தமிழீழ ஒறுப்புச் சட்டம் ஆக்கப்பட்டது. முதலில் சட்டக்கோவையில் குறிப்பிடப் பட்டிருந்த குற்றவியல் தொடர்பான விடயங்களை விட மேலதிக விளக்கத்துடனும் தெளிவுடனும் ஒரு குற்றச் சட்டத் தொகுப்பாக இச் சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. அத்துடன் கூடியளவில் வடமொழிசொல் கலப்பினைத் தன்னகத்தே அடக்காத சட்டமாக அமைந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

இதே வழியில் ஆக்கப்பட்ட சட்டங்களுள் 10வது சட்டமாக தமிழீழ உணவுச் சட்டமான 1995ம் ஆண்டின் 01ம் எண் சட்டம் வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டம் தமிழீழத்தில் செய்யப்படுகின்ற உணவாக்கல், உணவு இறக்குமதி, வழங்கல், விற்பனை போன்றவைகளில் உள்ள சுகாதாரச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கும். இச்செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்குமான ஒரு சட்டமாக இது அமைந்துள்ளது.

இதுவரை தமிழீழ சட்டக்கோவை தொடக்கம் தமிழீழ உணவுச் சட்டம் வரை 10 நூல்கள் தேசியத் தலைவரின் அங்கீகாரத்தடனும், அனுமதியுடனும் நீதி நிர்வாகத்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

– நன்றி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி? பதில்!

ஐம்பதினாயிரம் (50,000/-) ரூபா பணத்தை பரஞ்சோதி நாதன் இல. 38. பூம்புகார் அரியாலை என்னும் முகவரியில் வசிப்பவரிடமிருந்து கடனாக, மூன்று மாதத்திற்குள் திருப்பித் தருவதாக மணியம் - கண்ணன் இல: 20 பூம்புகார். அரியாலை என்பவர் 25. 1. 1995 அன்று பெற்றுக் கொண்டார். ஆனால் மணியம் - கண்ணன் என்பவர் தான் குறிப்பிட்டது போல் மேற்குறித்த பணத்தை 3மாதகாலத்திற்குள் பரஞ்சோதி நாதனிடம் திருப்பிக் கொடுக்கவில்லை நாதன் தனது பணத்தை கண்ணனிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு கண்ணனின் வீட்டுக்குச் சென்று பலமுறை கேட்டுள்ளார். ஆனால் கண்ணன் பல சாட்டுக்களைக் கூறி காலம் கடத்தி வந்தார். இதன் விளைவாக நாதன் தமிழீழக் காவல்துறையின் யாழ்ப்பாணம் காவல்பணிமனையில் கண்ணனுக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். காவல்துறையினரின் விசாரணையின் போது தான் நாதனுக்கு மேற்குறித்த பணத்தைக் கொடுக்கவேண்டும் என்றும் 10 நாட்களுக்குள் தருவதாகவும் ஒப்புக்கொண்டு சென்றார். ஆனால் கண்ணன் குறிப்பிட்ட 10 நாட்களுக்குள் நாதனிடம் 50,000/- ரூபா பணத்தை ஒப்படைக்கவில்லை. எனவே யாழ்ப்பாணம் காவல்துறையினர் நாதனிடம் இவ்வழக்கை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றித்தில் தாக்கல் செய்து பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி கூறுகின்றனர்.

1) பரஞ்சோதி-நாதன் என்பவர் தமிழீழ மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் மணியம் கண்ணனுக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு வழக்கு அறிக்கை தயாரிப்பதுஎப்படி?

தமிழீழ மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

தன்மை : பணம்

வழ.இல :

பரஞ்சோதி - நாதன்
இல: 38, பூம்புகார்,
அரியாலை.

வழக்காளி.

எதிர்.

மணியம் - கண்ணன்
இல : 20. பூம்புகார்.
அரியாலை

எதிராளி.

இந்த 1995ம் ஆண்டு, பங்குனி மாதம், 25ம் திகதி வழக்காளியின் பிராதை அவர் சட்டவாளர். செல்வி சி. கண்மணி மூலம் வெளிப்படுத்துவதாவது

1. வழக்காளி வசிப்பதும் வழக்கெழு காரணம் எழுந்ததும் இந்நியாயாதிக்க நீதிமன்ற எல்லைக்குள்ளேயே ஆகும்.

2. வழக்காளியிடமிருந்து எதிராளி 1995ம் ஆண்டு 1ம் மாதம், 25ம் திகதி ஐம்பதினாயிரம் (50,000/-) ரூபா பணத்தை மூன்றாம் மாதத்திற்குள் திருப்பித் தருவதாகக் கூறி கடனாகப் பெற்றுச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வழக்காளி – எதிராளியிடம் மேற்குறித்த பணத்தைக்கொடுத்த மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. வழக்காளி எதிராளியின் வீட்டிற்கு பல தடவைகள் சென்று கேட்டபோது எதிராளி மேற்குறித்த பணத்தைத் தர மறுக்கின்றார்.

4. வழக்காளி - எதிராளியிடமிருந்து ரூபா 50,000/ - த்தைப் பெறுவதற்காக தமிழீழக் காவல்துறையினரின் யாழ்ப்பாணம் காவல்பணிமனையில் நடைபெற்ற மேற்படி வழக்கை முறையிட்டார்.

5. மேற்படி வழக்கு யாழ்ப்பாணக் காவல்பணிமனையில் நடைபெற்ற வேளையில் எதிராளி ஒரு தடவை சமூகம் தந்து மேற்படி பணத்தை எதிராளி 10 நாட்களுக்குள் வழக்காளியிடம் திருப்பிக்கொடுப்பதாக ஒப்புக் கொண்டு சென்றார்.

6. எதிராளி மேற்குறித்த 50,000/- ரூபா பணத்தை வழக்காளியிடம் 10 நாட்களுக்குள் தருவதாக யாழ்ப்பாணம் காவல்பணிமனையில் ஒப்புக் கொண்டு சென்றவாறு பணத்தை திரும்ப வழக்காளியிடம் ஒப்படைக்கவில்லை.

7. ஆனால் மீண்டும்மீண்டும் எதிராளியை காவல்துறையினர் அழைத்தபோதும் எதிராளி காவல்ப்பணிமனைக்குச் சமூகம் அளிக்கவில்லை. எனவேதான் இவ்வழக்கை மன்றிற்குப் பாரப்படுத்தும்படி காவல்துறையினர் கூறினார்கள். எனவே, வழக்காளிக்கு வழக்கு ஒன்றை எதிராளிக்கு எதிராக தாக்கல் செய்ய வழக்கெழு காரணம் ஒன்று எழுந்துள்ளது.

**கோரிக்கைகள்:**

1. வழக்காளியிடம் எதிராளி பெற்ற 50,000/ - ரூபா பணத்தை வழக்காளியிடம் திருப்பி ஒப்படைக்கும்படி எதிராளிக்கு ஒரு கட்டளையை வழங்கும்படியும்.

2. மேற்குறித்த 50,000/- ரூபா பணத்திற்கு நீதிமன்றம் நியாயமெனக்கருதும் வட்டிப்பணத்தை வழக்காளி எதிராளியிடமிருந்து பெறுவதற்கு ஒரு கட்டளையையும்.

3. வழக்காளிக்கு இவ் வழக்கில் ஏற்பட்ட வழக்குச் செலவுகளை எதிராளியிடமிருந்து பெற ஒரு கட்டளையும்.

4. மற்றும் நீதிமன்றம் நியாயமெனக் கருதும் பிற நிவாரணங்களை வழக்காளி பெற ஒரு கட்டளையும்.

வழக்காளி கையொப்பம்.

வழக்காளியின் சட்டவாளர்

திகதி:

★ தமக்குள் தாமே பொய் பேசுபவர்கள்
எதிலும் தோல்வியே அடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள்.

# அதிகாரி ஜொனி மே கிப்சன்

அமெரிக்க கூட்டரசின் புலனாய்வுத்துறை செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும் சமஷ்டிப் புலனாய்வுக்குழு உறுப்பினரான ஜொனி மே கிப்சன் ஓர் திறமையான பெண் அதிகாரி ஆவார். F.B.I இராணுவப் பயிற்சிக் கூடத்தில் பயிற்சிபெற்ற சிறந்த ஒரு வீராங்கனையாக பெண் உளவாளியாகத் திகழ்ந்தார். ஜொனி மே கிப்சன் தன்னையே பணயமாக வைத்து அமெரிக்காவையே உலுக்கிய பல கொலை, கொள்ளைகளைச் செய்யும் கூட்டத்துள் ஊடுருவி அவர்களைச் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொடுத்த பெருமைக்குரியவர் ஆவார்

திருமணமாகி ஒரு குழந்தைக்கு தாயாரான ஜொனி, தன்கணவனினதும், குழந்தையினதும் பாசப்பிணைப்பி லிருந்து பிரிந்து பல எதிர்ப்புக்களின் மத்தியில் F.B.I இராணுவப் பயிற்சிக்கல்லூரியில் தன்னை இணைத்துக்கொண்டார். நாட்டில் நடக்கும் அனர்த்தங்களையும், கொடூரங்களையும் இனங்கண்டு அதற்கு காரணமான சமூகப்புல்லுருவிகளைச் சட்டத்திற்கு முன் தண்டிக்கத் துடித்தார். ஜொனி மே கிப்சன் நாட்டுக்கு சேவை செய்யும் நோக்குடன் F. B. I. இராணுவ கூடத்தில் தன் அன்பு மகளின் நலனைக் கருத்தில் எடுக்காது விடா முயற்சியுடனும், உறுதியுடனும் தன் பயிற்சியை முடித்துக்கொண்டார் பயிற்சி முடித்த அன்று அவருக்குப் பாராட்டு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் தான் தன் மகளையும் கணவனையும் காண்கின்றார். பாசப்பிணைப்பில் தன்னை சில மணி நேரம் இணைத்துக் கொண்டாலும், மறுகணம் பந்த பாசங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து தன் பணியைத் தொடரத் தயாராகின்றார். ஜொனி. இலக்குப் பார்த்துச் சுடுவதில் இருந்து சகல பயிற்சிகளிலும் திறமைத்தேர்ச்சி பெற்று அனைவராலும் பாராட்டப்பட்டார்.

அவரின் திறமையை வெளிக்கொணர்ந்து உலகினையே வியப்பில் ஆழ்த்தியது ஒரு கடற் கொள்ளையாகும். அதாவது அமெரிக்கத் துறைமுகம் ஒன்றில் ஆயுதக் கடத்தல் செய்து வந்த ஒரு பயங்கரக் கொள்ளை கூட்டத்தை தனது திறமையால் சிறைக்கு அனுப்பிய பெருமைக்குரியவர் ஜொனி. பயிற்சி முடிந்து முதன் முதல் அவர் செய்த வெற்றிகரச் செயல் இதுதான். இவ்வெற்றி அவரின் முன்னேற்றத்திற்கு ஒரு அத்திவாரக்கல்லாக அமைந்தது. அனுமதியின்றி ஆயுதக்கடத்தல், தங்கக் கடத்தல், தமது செயல் நிறைவேற மக்களைப் பணயம் வைத்தல், தேவைப்பட்டால் அவர்களைக் கொல்லல் போன்ற பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு கொடூரம் புரிந்து வந்த அக்கொள்ளைக் கோஷ்டியின் தலைவனைச் சாதாரண ஒரு ஆசிரியையாக தன்னை அறிமுகப்படுத்திச் சந்திக்கிறார் ஜொனி. படிப்படியாக அவனைத் தன்வசப்படுத்தி சகல ரகசியங்களையும் பெற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுயிரையே பணயமாக வைத்து அக்கூட்டத்தின் கோட்டைக்குள்ளேயே நுழைந்து தமது சாதுரியத்தால் அவர்களை வென்றார்.

கடைசி நேரத்தில் ஆயுதங்கள் கடத்தப்படும் வேளையில் கையும் மெய்யுமாக அவர்களைப்பிடித்து தான் யார் என்பதைக் காட்டி அக்கூட்டத்தையே பிரமிக்க வைக்கின்றார். பலகாலமாக அமெரிக்க அரசையே ஏமாற்றித் திரிந்த கூட்டமான அக்கொள்ளைக் கூட்டத்தை கையில் விலங்கு மாட்ட வைத்து தண்டனை பெற்றுக்கொடுத்த ஜொனி மே கிப்சன் அமெரிக்கக்கூட்டரசாலே பாராட்டப்பட்டார். F. B. I நிறுவனத்தில் உயர் அதிகாரியாக நியமனம் பெற்று தன் கடமையை மேலும் தொடர்ந்தார். இன்று F. B. I. நிறுவனம் புலனாய்வுத் துறையில் பிரசித்தி பெற்று, பெருமையுடன் செய்யப்பட்டு வருகிறது என்றால் அதற்கு இத்தகைய உறுப்பினர்களின் உறுதி மிக்க முயற்சியும், செயற்பாடும் நாட்டுப்பற்றும் கொண்ட அவர்களின் அயராத உழைப்புமே காரணம் என்றால் அது மிகையாகாது.

இன்று சமஷ்டிப்புலனாய்வுக்குழு நவீன முறையில் பல குற்றப்புலனாய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இதில் பணிபுரியும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் சிறந்த முறையில் பயிற்றப்பட்டே பணியில் ஈடுபடுகின்றனர். இவ்வமைப்பு உலகிலேயே புலனாய்வுத் துறையில் முன்னணியில் திகழ இத்தகைய பயிற்சிகளே காரணம் எனலாம். அமெரிக்காவில் நடக்கும் பிரசித்தி பெற்ற கொலை, கொள்ளை, கடத்தல் போன்றவற்றைத் தகுந்த முறையில் கண்டுபிடித்து குற்றவாளிகளை இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்து நீதியின் முன் நிறுத்துவதற்குப் பின்னணியாகவும் முக்கிய பங்காளியாகவும் F. B. I. இன்று செயற்படுகின்றது.

இதன் தலைவராக எட்கா கூவர் என்பவரே பலகாலமாக இருந்து வந்திருக்கின்றார். இவரது காலத்தில்தான் இந்நிறுவனம் அபிவிருத்தியும், முன்னேற்றமும் அடைந்து முதன் நிலைக்கு கொண்டுவரப்பட்டது. இதற்கும் C. I. A. கும் எவ்வகையிலும் தொடர்புகள் ஏற்படுவதில்லை. வேறுபட்ட துறையாகவே செயற்படுகின்றது இதன் தலைமையகம் வொஷிங்டனில் உள்ளது.

இவ்வகையில் உலகிலேயே பல துறைகளிலும் பல சாதனைகளைப் படைதது வரும் பெண்கள் சமுதாய வரிசையில் புலனாய்வுத் துறையில் சிறப்பும், புகழ்பெற்ற ஒரு அதிகாரியாக ஜொனிமே கிப்சம் இன்று திகழ்கிறார். இவரைப் போன்றவர்களின் வீரமும் உறுதியும் கொண்ட வரலாறுகள் ஒவ்வொருவராலும் அறியப்பட வேண்டிய தொன்றாகும்.

— கண்மணி —

குற்றவாளிக்கு தண்டனை
வழங்குவது
அவனை வஞ்சிப்பதற்காக அல்ல.
சமுதாயத்தில் அப்படி ஒரு செய்தி
மீண்டும்
இடம்பெறக் கூடாது என்பதற்காகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாதையில் நகரும் உலகநீதி முறைகள்

**"ஒருவர் இறக்கும் முன்பு செய்த ஒரு குற்றத்திற்கான குற்றப் பொறுப்பை அவரது இறப்பின் பின்பு சட்டப்படி எண்பிக்கப்பட்ட பொழுது அவரது இறந்த உடலைப் புதைகுழியால் வெளியே எடுத்து அதற்குத் தண்டனை வழங்கியுள்ளனர். மேலும் இரண்டு பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கட்கு இருபது வருட சிறையை இங்கிலாந்தின் ஒரு நீதிமன்றம் அவர்களது ஒரு கொலைக்குற்றச் செயலுக்காக விதித்தது. இவ்வகையாகத் தீர்ப்புக்கள் வழங்கும் நீதியினைப் புதிய பாதையில் நகரும் நீதி என்றும் இது சட்ட வரம்புகட்கு அப்பாற்பட்டது என்றும் சட்ட வல்லுநர்கள் எண்ணுகின்றனர்"**

இன்றைய உலக ஒழுங்கு பல்துறை சார்ந்த பல மாற்றங்களுடன் முன்னேறி செல்கின்றது. எனினும் குறிப்பாக அது பொருளாதாரப்போட்டி அதிலும் இலத்திரனியல் போட்டி எனும் ரீதியில் இன்றைய உலக நகர்வியக்கம் அமைந்துள்ளது. இது வேறுபட்ட பல அரசியல், சமூக இராணுவ முறுகல் நிலைகளை அடுத்த உலகம்சந்திக்கும் பொருளாதார முறுகல் நிலையை எய்தியுள்ளது. இது பொருளாதாரப் போர் என அழைக்கப்படுகிறது

இப்போதைய உலக இயக்கம் இவ்வாறு பொருளாதார ரீதியில் அமைந்திருக்கையில், சட்டரீதியாக அல்லது நீதி பரிபாலன ரீதியாக எதனை உலக நாடுகின்றது? இது தொடர்பான உலகம் இயக்கம்எப்படி உளது அல்லது இது பற்றிய உலக யதார்த்த நிலை என்ன என்பது பற்றி நோக்கும் போது அது விசித்திரமான ஒரு பாதையில் செல்வதை உற்றுப் பார்க்கும் எவராலும் அவதானிக்க முடியும்.

அதாவது படிமுறை வளர்ச்சியினூடாக வந்து கொண்டிருந்த ஒவ்வொரு நாடுகளினதும் நீதி செலுத்துகை முறைகள் சட்ட ஆக்கங்கள் ஊடாக அல்லது வரையறுக்கப்பட்ட சட்டங்களின் ஊடாக வரையறை செய்யப்பட்டன. இத்தகைய வரையறுப்பானது, பரவலாக வலுவானதாயும் நீதிபரிபாலனத்தை அடைத்து வைத்தாற் போன்றும் அமைந்து இருக்கின்றது. இந்த முறைமை இடைக்காலமான கடந்த பத்தாம் நூற்றாண்டு அளவில் ஆரம்பமாகி இன்றுவரை தொடர்கின்றது. ஆனால் ஆதிச்சமுதாய ஒழுங்கில் வரையப்பட்ட சட்ட அமைப்புக்கள் அல்லது கட்டுப்படுத்தும் பரப்புக்கள் எது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் பெரிதாகப் பேணப்படவில்லை. இது ஒரு சிறந்த நீதியை சமூகங்கட்கு ஏற்ற வகையில் செயற்படுத்த வழிவகுத்தது. ஆனால் அங்கே பல பிற்போக்கான நடைமுறைகள் பல பின்பற்றப்பட்டமையும் நிதர்சனமான ஒரு விடயமாகும்· அத்துடன் முற்காலத்தில் பல விசித்திரமான நீதி பரிபாலன முறைகளும் நடைமுறையில் இருந்தன.

ஆனால் இன்று நவீன மயமாகும் நீதி பரிபாலன முறைகள் பண்டை சமுதாய நீதி செலுத்துகைக்கு ஒப்பான முறையில் ஆனால் முன்னேறிச் செல்வதனை அவதானிக்கலாம் இந்த இன்றைய நீதி பரிபாலன முறையில் மாற்றங்களைக் கொண்டுவரும் வேறுபட்ட பல நடவடிக்கைகளை ஐரோப்பிய நாடுகளும் வட அமெரிக்க நாடுகளுமே பெரிதும் கடைப்பிடிக்கின்றன. இவ்வாறான நடைமுறைகள் உலகின் ஏனைய நாடுகளது சட்ட அறிஞர்களைத் திரும்பிப் பார்க்க வைக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இந்த நாடுகள் தமக்கென வரையறை செய்து அமைக்கப்பட்ட சட்ட ஒழுங்குகளை உடையனவாகவே காணப்பட்டாலும் அவைகளைப் புறத்தொதுக்கித் தமது சட்ட அலுவல்களை மேற்கொள்கின்றன. இவ்வாறாக இடம்பெறும் இச்செயல்முறை வளர்ச்சியானது, சட்ட உலகில் செய்யப்படுகின்ற ஒரு பெரும் விந்தையான மாற்றம் என்று அதனை அவதானிக்கும் சட்ட அறிஞர்களால் வர்ணிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய பாதையில் நகரும் நாடுகளில் இடம்பெற்ற பல உண்மைச் சம்பவங்கள் இந்தச் சட்ட உலகத்தின் விசித்திர நகர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. பல பரிமாணங்களில், உலகம் நடை போடும் போது இத்தகைய நிகழ்வுகள் சட்ட உலகம் என்ற ஒரு பரிமாணத்திலும் உலகம் நடைபோடுவதனைக் காட்டுகின்றது என்பதில் ஐயமில்லை.

இப்புதிய நகர்வில், சிக்கல்களை நீதிபதிகள் அணுகுவதனையும் அவற்றிற்கு முடிவுகள் வழங்குவதையும் நோக்கும் போது ஒரு படியை அறியலாம். அதாவது முற்றகவையவர் மட்டுமே சட்டச் செயற்பாடுகளுக்குச் சட்ட அங்கீகாரம் உடையோர் எனும் கோட்பாடு பொதுவாக இருந்தது ஆனால் சிற்றகவையினரும் தமக்குச் சட்டம் அனுமதியளிக்காத விடயங்களில் தகுதியுடைய முற்றகவையர் போற் செயற்படலாம் என இங்கிலாந்திலும் ஐக்கிய அமெரிக்காவிலும் கொடுபட்ட இரண்டு வேறுபட்ட தீர்ப்புகள் மு வு கூறின அதே போல் ஒருவர் இறக்கும் முன்பு செய்த ஒரு குற்றத்திற்கான குற்றப் பொறுப்பை அவரது இறப்பின் பின்பு சட்டப்படி எண்பிக்கப்பட்ட பொழுது அவரது இறந்த உடலைப் புதைகுழியால் வெளியேஎடுத்து அதற்குத் தண்டனை வழங்கியுள்ளனர். மேலும் இரண்டு பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கட்கு இருபது வருட சிறையை இங்கிலாந்தின் ஒரு நீதிமன்றம் அவர்களது ஒரு கொலைக்குற்றச் செயலுக்காக விதித்தது. இவ்வகையாகத் தீர்ப்புக்கள் வழங்கும் நீதியினைப் புதிய பாதையில் நகரும் நீதி என்றும் இது சட்ட வரம்புகட்கு அப்பாற்பட்டது என்றும் சட்ட வல்லுநர்கள் எண்ணுகின்றனர். அதனுடன் இந்தியாவின் நீதி விசாரிப்பு முறையில் நீதிபதிகளின் தற்துணிவு தற்பொழுது பெருமளவில் வளர்ச்சி பெற்றுவருவதனையும் இதனால் விசித்திரமான நீதி செலுத்துகை முறைகள் வளரலாம் எனவும் ஆருடம் கூறலாம்.

அதே போலவே சட்ட ஆக்கங்களும் பல மௌனங்களைச் சந்திப்பதனாலும் விசித்திரமான பல விடயங்களை ஏற்பதாலும் சட்ட உலகின் புதிரான நகர்வில் பிரதான பங்கு வகிக்கின்றது. அண்மையில் இத்தாலி ஒரு புதிய ட்ட ஒழுங்கை பற்றி சிந்தித்து அதற்கு வடிவம் கொடுத்து வருகின்றது. அதாவது புதிய வகையில் இலகுபடுத்தப்பட்டு எளிமையாக்கப்பட்ட ஒரு நீதி பரிபாலன முறை மிகவும் சிறப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதும் அனைவருக்கும் நீதி கிடைக்கும் வகையில் அமையும் என்பதுமே அதுவாகும். இந்த முறைமை ஏனைய ஐரோப்பிய நாடுகளும் தமது நாடுகளுள் பரப்பலாமா என்பதைப் பற்றிக் கடுமையாகச் சிந்திக்கும் அளவிற்கு அமைந்துள்ளது.

அது மட்டுமல்லாமல் திறந்த முறை நீதி மன்றங்களில் அமைப்பு மாற்றப்பட்டு அடைபட்ட நான்கு சுவர்களுள் இன்றைய நீதி செலுத்தப்படும் முறை நடைபோட ஆரம்பித்துள்ளது. இது பலரது கால விரயத்தைக் குறைத்து இலகுவில் மக்கள் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தி நீதி செலுத்தப்படுகிறது. இதனால் அந்த நாடுகளில் மக்கள் நிறைவடைகிறார்கள் அத்துடன் நீதி இலகுவானதாயும் விரைவானதாயும் செலுத்தப்படவும் கூடியதாக அமையவும் செய்கின்றது.

இவ்வாறான ஒரு விசித்திர பாதையில் நகரும் நீதி பரிபாலனத்தினை ஊக்குவிக்கப் பல வழிவகைகளும், ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் வளர்ந்த நாடுகளால் மேற்கொள்ளப்படுகிறது. அவை பெரும்பாலும் நகரும் நீதிமன்றுகள், அதிகளவான சட்ட அறிஞர்கள், பெருந்தொகை நீதிபதிகள், நெருக்கமான நீதிமன்ற அமைப்பு முறைகள் மூலம் நகர்த்திச் செல்லப்படுகின்றன.

இவ்வாறான பல விடயங்களை ஆராய்ந்து பார்த்தால் இன்றைய உலக நீதி அல்லது சட்ட உலகம் ஒரு புதிய பாதையில் நடைபோடுவதை அவதானிக்க முடியும் ஆனால் இன்னும் பழமைகளையே கடைப்பிடித்து வரும் நீதி அமைப்பைக் கொண்ட அல்லது பிற்போக்கான வரையறுக்கப்பட்ட நீதி அமைப்பு முறைகளைப் பின்பற்றும் பல நாடுகளும் உள்ளனவென்பதும் வெளிப்படையான ஓர் உண்மையே.

அனேகமாக இத்தகைய சட்ட உலகின் நீதி செலுத்துகை முறைகளில் உள்ளபோற்றத்தக்க விடயங்கள் பிற்போக்குத் தன்மையுடைய ஒரு நாட்டில் உதயம் பெற வேண்டுமானால் அங்கே ஒரு சமூகப் புரட்சி அல்லது கலாச்சாரப்புரட்சி தேவையான ஒன்றாகவே உளது. அவ்வாறு புரட்சி இடம்பெறாவிடின் பழமைவாதக் கருத்துக்களை அச்சமூக அமைப்புக்களில் இருந்து களைவது என்பது குதிரைக் கொம்பு போன்றதொரு சங்கடமான விடயம் என்பதில் ஐயமில்லை. பழமைக் கருத்துக்கள் களையப்படும் போது தான் இவ்வாறான ஒரு நீதி வகையை அந்தச் சமூகம் ஜீரணித்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

— பிரம்மபுத்திரன் —

## சிந்தனைக்கு சில வரிகள்

''தன்னம்பிக்கை எவனுக்கு இல்லையோ அவனுக்கு பிறரிடத்திலும் நம்பிக்கை இருப்பதில்லை.''

''மற்றவரின் தவறுகள் எப்படி அசிங்கமாக தெரிகிறது என்பதை உணர்ந்து உமது தவறுகளை திருத்து.''

''சட்டம் சமுதாயத்தை ஒழுங்குபடுத்துகிறது
.........ஏனெனில் சமுதாயம் பிரசவிக்கும் குழந்தையே சட்டம்.''

— வே. கலையரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " வேட்டைக் கத்தி "

**லெவ் ஷெய்னிங் எழுதிய புலனாய்வாளரின் குறிப்புக்கள் என்ற புத்தகத்திலிருந்து**

உயிரியல் பேராசிரியர் பூரவும் அவரது உதவியாளர் வோரனவும் ஓராண்டு காலத்திற்கு அறிவியல் ஆராய்ச்சி நடத்தும் பொருட்டு பாரெண்ட்ஸ் கடலிலுள்ள கல்கூயெவ் தீவிற்குச் செல்வதற்கான உத்தரவு இறுதியாகக் கையெழுத்திடப் பெற்று அறிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் அவர்களுடைய சகாக்கள் இந்த உத்தரவைப் படித்துச் சிரித்தார்கள். அந்தப் பேராசிரியருக்கும் அவரது உதவியாளருக்கும் ஒருவரையொருவர் காணவே பிடிக்காது என்பதை ஆசிரியர்களும் மாணவர்களும் மிக நன்றாக அறிவார்கள். அந்த இருவரும் ஆள் நடமாட்டமற்ற ஒரு தீவுக்கு அனுப்பப்படுவார்கள், அங்கே முழு ஆண்டுக்கு இருபத்திநான்கு மணி நேரமும் சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கும் என்ற செய்தியைப் படித்தவர்கள் மலைத்துப்போய், தோள்களைக் குலுக்கி முறுவலித்தார்கள். கடுங் குளிரில் இந்த இருவரது எரிச்சலும் தணிந்துவிடும் என்பதற்காக, வேண்டுமென்றே தயாரிக்கப்பட்ட திட்டம் இது என்று சிலர் கூறினர்.

" அங்கே நண்பர்களாகி விடுவார்கள். இணை பிரியாத் தோழர்களாகத் திரும்புகிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள், " என்றார்கள்.

ஆனால் மற்ற எல்லோரையும் விட மிகுந்த வியப்புற்றவர்கள் உத்தரவில் குறிக்கப்பட்டிருந்த இருவருமே குளிர் காலத்திற்குத் தமக்குத் துணைவனாக வாய்த்திருந்த மனிதனின் பெயரைக் கண்டமாத்திரத்தில் அடைந்த அதிர்ச்சியால் பேராசிரியர் இரவு முழுக்கத் தூங்கவே இல்லை என்று பல்கலைக்கழகத்தில் பேசிக்கொண்டார்கள். வோரனவின் தவிப்பும் எந்தவகையிலும் குறைந்து போய் விடவில்லை.

ஆயினும் உத்தரவு என்றால் உத்தரவுதான். பேராசிரியர் பூரவும், உதவிப் பேராசிரியர் வோரனவும் அடங்கிய பல்கலைக்கழக ஆராய்ச்சிக்குழு சில நாள்களுக்குப் பிறகு தொலைதூர பாரெண்ட்ஸ் கடலிலிருந்த ஒரு தீவிற்குப் புறப்பட்டுச் சென்றது. அங்கு இருவரும் சேர்ந்து நீண்ட ஆர்க்டிக் ஆண்டைக் கழிக்க வேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய முதலாவது கடிதங்கள் ஒரு மாதத்திற்குப் பிறகு வந்து சேர்ந்தன. தங்களது முதல் மனப் பதிவுகளையும், பயண விபரங்களையும், எதிர்காலச்செயல்திட்டங்களையும், பற்றி எழுதியிருந்தார்கள்.

பேராசிரியர் தமது கடித்ததில் '' இந்த ஆசாமி மட்டும் இங்கு இல்லாமல் இருந்தால் எல்லாம் நன்றாகவே இருக்கும். விலங்கியலாளரது அறிவியல் ஆராய்ச்சிக்குரிய விஷயமாவதற்கு இவன் எல்லா வகையிலும் தகுதியுள்ளவன். முன்போலவே இந்த இளைஞன் என்னை தொடர்ந்து உணர்ச்சிவசப் படுத்தி வருகிறான் இங்கிருப்பனால் ஓயாமல் இவனை நான் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. இவன் மீதான எனது முன்னைய வெறுப்பு எவ்வளவு சரியானது என்பது திரும்பவும் உறுதிப்பட்டிருக்கிறது..'' என எழுதியிந்தார்.

இது போலவே வோரனவும், '' இந்தக் கிழட்டுச் சிடுசிடுப்பாளரின் பொறுமையின்மை அளவு கடந்து போய் விட்டது'' என்றும், '' அல்லும் பகலும் இவரோடு இருப்பது பெருஞ்சித்திரவதையாக இருக்கிறது'' என்றும் குறை கூறி எழுதியிருந்தார்.

பல்கலைக்கழகத்தில் இக்கடிதங்களைப் படித்துச் சிரித்து, தனித்தனியே நல்ல மாதிரியான இந்த இருவரும், ஒருவரையொருவர் வெறுப்பதில் இவ்வளவு பிடிவாதமாக இருந்து வருவதை எண்ணி அவர்களால் வியக்காமலிருக்க முடியவில்லை.

சிறிதும் ஆதாரமற்ற இந்தச் சச்சரவு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது பற்றி அவர்கள் விவாதித்தனர். அந்த இருவரும் ஒத்துப்போய் விடுவார்கள் எனவும் ஒருவரையொருவர் நேசிக்கத் தொடங்கி விடுவார்கள் எனவும் நம்பிக்கைவாதிகள் கூறினர். அவநம்பிக்கைவாதிகளோ, முடிவு இதற்கு நேர்மாறாகத்தான் இருக்கும் என்று வாதித்தனர். இது பற்றி எத்தனையோ பந்தயங்கள் கட்டப்பட்டன. இரண்டு பூசல்கள் கூட விளைந்தன. எனினும் ஒரு மாதத்திற்குப் பிறகு பேராசிரியர் பூரவ் உதவிப் பேராசிரியர் வோரனால் கொலை செய்யப்பட்டு விட்டார் என்பதை அறிவிக்கும் சுருக்கமான தந்தி கல்கூயெவ் தீவிலிருந்து பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்தது.

வழக்கிற்குப் பொறுப்பான சிறப்புப் புலனாய்வாளர் அந்தத் தீவிற்கு நேரில் போக முடியுமா என்பதை முதலில் விசாரித்தார். துரதிர்ஷ்டவசமாய் ஆண்டின் அந்நேரத்தில் வானிலை மற்றும் பிற நிலைமைகள் காரணமாக அங்கு செல்வது இயலாதிருந்தது என்று தெரிந்து கொண்டார்.

பின்னர் அந்தப் புலனாய்வாளர் அத்தீவின் அருகே சென்று கொண்டிருந்த பனி உடைக்கும் கப்பல் ஒன்றின் காப்டனுக்கு வானொலிச் செய்தி அனுப்பி, அவர் செய்ய வேண்டியவைகளை எடுத்துரைத்தார். கொலையுண்டவரின் பிணத்தை பனிக்கட்டி வைத்து மாஸ்கோ கொண்டுவந்து சேர்க்கும் படியும், சாட்சிகள் யாரேனும் இருந்தால் விசாரிக்கும் படியும், கொலை நடந்த இடத்தை முழுவதும் சோதனையிடும் படியும் அறிவுறுத்தப்பட்டார்.

தேவையான எல்லா முன்னெச்சரிக்கைகளுடனும் வோரனவை மாஸ்கோவுக்குக் கொண்டுவருமாறும் புலனாய்வாளர் மேலும் கோரியிருந்தார்.

அவரது உத்தரவுகளை நிறைவேற்றிய காப்டன், சில வாரங்களுக்குப் பின் புலனாய்வாளரின் அலுவலகத்திற்கு வந்தார். அவரோடு முப்பது வயதுக்கு மேலுள்ள ஒருவன் பறிகொடுத்தவன் போன்ற அரண்ட பார்வையுடன் வந்தான்.

அவன் தான் வோரனவ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகடுத்தவாறு அவரை நோக்கி, "தயவு செய்து உட்காருங்கள்," என்றார் புலனாய்வாளர்.

"நன்றி," அமைதியாக கூறினார் வோரனவ்.

விசாரணை தொடங்கிற்று. வோரனவின் வாழ்க்கைக்குறிப்பைப் புலனாய்வாளர் கவனமாகப் பார்வையிட்டார்.

பூரவைக் கொலை செய்த நாள்வரை அவருடைய முப்பத்திரண்டு ஆண்டுகளிலும் நேர்மையாகவும் நன்றாகவும் வோரனவ் வாழ்ந்திருக்கிறார். அவர் இளைஞர் எனினும் சந்தேகமின்றி திறமை வாய்ந்த விஞ்ஞானி. சொந்தமாகப் பல விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதியிருந்தார், வெற்றிப் பாதையில் உறுதியுடன் முன்னேறிக் கொண்டிருந்தார்.

"கடவுள் பெயரால், பேராசிரியரை ஏன் கொன்றீர்கள்?" என்றார் சாதாரணமாக அமைதியும் நிதானமுமாகவிருக்கும் புலனாய்வாளர் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவராக, "உங்களுக்குள்ளே என்ன ஆச்சு"

ஆதரவற்றவாறு வோரனவ் தோள்களைக் குலுக்கினார்.

"பாருங்கள்," மன்னிப்புக் கேட்பது போன்ற தயக்கம் நிறைந்த குரலில் "விசயம் என்னவென்றால்... விசயம் என்னவென்றால், நான் அவரைக் கொல்லவேயில்லை..." என்றார்.

"ஆனால் அவர் கொல்லப்பட்டார் தானே?"

"ஆமாம்.

"குற்றம் நடந்த இடத்தில் உங்கள் இருவரைத் தவிர வேறு யாராவது இருந்தார்களா?"

"இல்லை, நாங்கள் இருவர் மட்டுமே. அங்கே வேறு யாரும் இருந்திருக்கவும் முடியாது. அதைப் பற்றிச் சந்தேகமில்லை."

"அப்படியானால் நீங்கள் ஏன் குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை இதை ஒப்புக் கொள்ளுங்கள்; ஓரிடத்தில் இருந்த இருவரில் ஒருவர் கொல்லப்பட்டால், கொலை செய்தவர்..."

'இரண்டாவது ஆளாகத்தான் இருக்க வேண்டும்," என்று வோரனவ் உடன் ஒப்புக்கொண்டு விட்டார் சந்தேகமில்லாமல் அப்படித்தான். ஆனால் நான் அவரைக் கொலை செய்யவில்லை. இதில் பயங்கரமான விசயம் என்னவெனில், எனது புகலற்ற நிலைமையும், என்னைக் காப்பாற்ற இந்த உலகத்தில் வழியே இல்லை என்பதும் எனக்கு நன்கு தெரிந்துள்ளன. உண்மை, எதுவோ சொல்வார்களே, அதுபோல நான் கையுங்களவுமாய்ப் பிடிபட்டு விட்டேன் நான் உங்களுடைய நிலையில் இருந்தால் சந்தேகப்பட்டிருக்க மாட்டேன். எனக்குப் புரிகிறது. எந்த மோசமான விளைவுக்கும் நான் ஆயத்தமாகவே இருக்கிறேன். ஆயினும் நான் ... நான் அவரைக் கொலை செய்யவில்லை."

வோரனவ் அழத் தொடங்கினார். அவர் பேசியது போலவே தேம்பியது விந்தையாயிருந்தது இந்த உயரமான நிதானமான, பண்பட்ட மனிதர் கோபமின்றி, புகலின்றி, பரிதாபமாக, குழந்தையைப் போலத் தேம்பினார். பிறர் மனத்தை உருக்கும் எண்ணத்துடன் அவர் கண்ணீர் விடவில்லை. எனினும் கண்ணீரை மறைப்பதற்கும் அவர் முயலவில்லை. எப்படி எளிமையுடன், சூதுவாது இல்லாது பேசினாரோ அப்படியே அழுதார்.

"நிதானத்துக்கு வாருங்கள்", என்றார் புலனாய்வாளர். "நீங்கள் அவரைக் கொன்றிருந்தால் – சாட்சியங்கள் எல்லாம் அப்படியே நிரூபிக்கின்றன - குற்றத்தை ஒப்புக்கொள்வது தான் சிறந்தது. நீங்கள் கொல்லவில்லையானால், உங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். எனது வாதங்களை மறுக்க வேண்டும், உங்கள் செயல்களை விளக்க வேண்டும், உங்களுக்கு ஆதரவாக உள்ளவை அனைத்தையும் எடுத்துரைக்க வேண்டும்.

இந்த அசாதாரணமான வழக்கில் வோரனவ் குற்றவாளி என்பது முற்றிலும் தெளிவாகப் புலப்பட்டது. சாட்சியங்கள் எல்லாம் பூரவைக் கொன்றது வோரனவ் தான், வேறெவருமன்று என்பதையே நிரூபித்தன. ஆகவே தான் புலனாய்வாளர் மேற்கண்டவாறு கூறினார். ஆனால் இவ்வாறிருந்தும், புலனாய்வாளர் வியக்கும்படி வோரனவ் தனது குற்றமின்மையை நிரூபிக்க முற்படாதது மட்டுமன்றி, எவ்விதத் தூண்டுதலுமில்லாமலே குற்றத்தில் மென்மேலும் தன்னைச் சிக்க வைக்கக் கூடிய தகவல்களைக் கொடுக்கலானார். தான் குற்றம் செய்யவேயில்லை என விடாது சொல்லிக் கொண்டே தனது கட்சிக்குத் தீங்கு விளைக்கக்கூடிய புதிய சந்தர்ப்பங்களையும், விஷயங்களையும், ஊகங்களையும், விரைந்து சொல்லிக்கொண்டே போனார்.

" நாங்கள் அத் தீவுக்கு வந்த போது, " அவர் கூறினார், " எங்களுடைய பகைமை முன்னிலும் மோசமானது. எங்களது உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள முயன்றோம். ஆனால் ஒவ்வொரு சொல்லிலும், நோக்கிலும் பார்வையிலும் எங்களது வெறுப்பு நுழைந்தது. எப்பொழுதும் உணர்ச்சிகளை அடக்கி வைத்திருப்பது மிகவும் சிரமமாயிருந்தது. துரதிர்ஷ்டவசமாக நிலைமையைச் சீர்படுத்த எதையும் செய்யவில்லை. பேராசிரியருக்கு என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன். அது போலவே எனக்கும் அவரைக் காணப் பிடிக்கவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், அவரைத் தாக்கவும், அடிக்கவும், கொல்லவுங்கூட எனக்குச் சில சமயங்களில் ஆத்திரம் வந்தது. இவ்வெண்ணங்கள் என்னை அலைக்கழிக்கத் தொடங்கின. அவை எனது நாட்குறிப்பிலும் இடம் பெற்றன. அதையும் கொண்டு வந்திருக்கிறேன். இதோ பாருங்கள்... "

இவ்வாறு கூறி குறிப்பேட்டை வோரனவ் புலனாய்வாளரிடம் நீட்டினார். உண்மை, பிற குறிப்புகளோடு பேராசிரியர் பூரவைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் வோரனவின் மனதில் மிக அடிக்கடி வந்து கொண்டிருந்ததென்பது குறிக்கப்பட்டிருந்தது.

" எனக்கு உண்மையாகவே தெரியாது, " அவர் தொடர்ந்தார். " ஒரு வேளை கடைசியில் என்னையே நான் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமை வந்திருக்கக்கூடும். அந்த நிலையில், அவரை உண்மையாகவே நான் கொன்றிருக்கவும் கூடும். ஒருகால் ! ஆனால் அவரை நான் கொல்லவில்லை. நடந்தது இது தான்.

" தீவின் நடுவிலிருக்கும் ஏரியில் வாத்து வேட்டைக்குச் செல்ல அன்று காலை நாங்கள் முடிவு செய்தோம். நாய் இழுக்கும் ஸ்லெட்ஜில் அங்கே போனோம். அதை ஓட்டியவன், நேநெத்ஸ் இனத்தவனாகிய வாஸ்யா என்பவன். நடுவழியில் ஸ்லெட்ஜ் முறிந்து போயிற்று. செல்ல இன்னும் இரண்டு மைல் இருந்தது. எனவே கால்நடையாகப் போவதென்று முடிவு செய்தோம். ஸ்லெட்ஜைப் பழுது திருத்த வாஸ்யா அங்கேயே தங்கிவிட்டான்.

" நாங்கள் ஏரியை அடைந்து சுட ஆரம்பித்ததும் வாத்துகள் எதிர்க்கரையை நோக்கி நீந்திச் சென்றன. பேராசிரியர் நின்ற இடத்திலேயே இருப்பதென்றும், நான் மறுகரைக்குச் சென்று அங்கிருந்து சுடுவது என்றும் யோசனை கூறினேன். அவரும் ஒப்புக்கொண்டார். பின்னர் நான் அக்கரைக்குப் போனேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் திறவுகோல்

'' ஒரு மைலுக்கு அப்பால் நின்று கொண்டு பார்க்கையில் மறுபுறத்தில் தனியாக நின்ற பேராசிரியரின் உருவம் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவர் அருகே யாரும் இல்லை, இருந்திருக்கவும் முடியாது. இதை நான் உறுதியாகச் சொல்கிறேன். பிறகு கிட்டத்தட்ட அவர் நின்ற இடத்திலிருந்து ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு நோக்கினேன். பேராசிரியர் விந்தையான முறையில் தள்ளாடி, பின்பு கீழே விழுந்ததைக் கண்டேன். என்ன நடந்தது என்பது தெரியாதவனாய், அவரிடம் திரும்ப ஓடினேன்.

'' நான் போய் சேர்ந்த பொழுது அவர் இன்னமும் உயிருடன் இருந்தார். ஆனால் உணர்விழந்து விட்டார். ஒரு வேட்டைக் கத்தி அவரது இடக் கண்ணுக்குள் பிடிவரை பாய்ந்திருந்தது. அந்தப்பிடி, சீழ் வடியும் பெரிய கட்டி போலக் கண் குழிக்கு வெளியே துருத்திக் கொண்டிருந்தது. அவரது வேட்டைத் துப்பாக்கி அருகே கிடந்தது...

தொடரும்

# கொள்ளி வாடகைக்கு

*எனக்குப் பிள்ளைகள் பன்னிருவர்*

*நான் கொடுத்து வைத்தவள்*

*ஏனெனில் ஒருத்தியைத் தவிர*

*அனைவரும் ஆண்பிள்ளைகள்*

*அது மட்டுமா*

*ஆறுபேர் கனடாவில்*

*ஆறுபேர் பெயர் கூற முடியாத*

*பிறநாட்டில் படிக்கிறார்கள்*

*இங்கு நானும் கணவனும்*

*மாளிகை வீட்டில் உல்லாசமாய்*

*உள்ளோம்*

*எங்களுக்கு என்ன குறை*

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின்

# திறவுகோல்

ஒரு நாள் மகனிடம் இருந்து
பார்சல் வந்தது அதில் திருமண
படங்கள் யாருக்குமல்ல
எனது மகனுக்குத்தான்
திருமணம் நடந்ததாம் பெற்றோர்
அருகில் இல்லாமையால் வெள்ளையர்கள்
இருந்து நடத்தி வைத்திருந்தனர்
எனக்குகவலையாய் இருந்தாலும்
இங்கு இருந்தால் கஸ்ரப்படுவான்
சந்தோசமாய் இருக்கட்டும்
அன்றொரு நாள் கணவன்
மயக்கமடைந்து விட்டார்
துடித்துப் போனேன் நான்
அறுபது வயதடைந்தும்
நானே வைத்திய சாலைக்கு கொண்டு
போனேன் இரவில்
அவரைப் பார்க்க வாடகைக்கு
ஒருவரை விட்டேன்
நோயின் தீவிரத்தால்
என் கணவர் இறந்து விட்டார்
பெற்ற பிள்ளைகள் இல்லை
இப்போ கொள்ளி வைக்க
வாடகைக்கு யாரை அழைக்கலாம்.

— மனோகரன் —




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணியம்

## நகைத் தொழிலகம்


### - தங்க நகை வியாபாரம் -



எண்ணம் போல் வண்ணம்
கொண்ட கண்கவரும் தங்க
நகைகளை தரம்குன்றாமல்
பெற்றிட யாழ்நகரில்
சிறந்த தொழிலகம்.

சுப்பிரமணியம் நகைத் தொழிலகம்
170A, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org